விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு ═══ Valampurii ═══

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 25 செவ்வாய்க்கிழமை (08.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 051

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சுதந்திரதின நிகழ்வில் பிரதமர் இல்லை

# அரசுடனான முரண்பாடே காரணமாம்!

'சம்புத்த ஜயந்தி' குழுவில் இருந்து விலகுவேன் என்றும் எச்சரிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் பிரதமர் டி.எம்.ஜயரட்ணவுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (16ஆம் பக்கம் பார்க்க)

## மக்களுக்கு அளித்த உறுதிமொழியை அரசு மீறிவிட்டது-ஐ.தே.கட்சி

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்த பின்னர் அரசாங்கம் பொதுமக்களுக்கு வழங்கிய உறுதி மொழிகள் எவற்றையும் காப்பாற்றவில்லை என ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. கட்சியின் நடாளுமன்ற உறுப்பினர் கஜந்த கருணாதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பு ஒன்றின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணத்தின் நான்கில் மூன்று பகுதிக் கடல், பொதுமக்களின் மீன்பிடித் தேவைகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறியிருந்தது.

எனினும் யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் நிறைவடைகின்ற நிலையிலும் இதுவரையில் அது நடைமுறைக்கு வரவில்லை. யுத்தம் நிறைவடைந்த பின்னர் பொதுமக்கள் அரசாங்கத்திடமிருந்து பொருட்களுக்கான விலைக் குறைப்பையே (15ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு பதிலாக ஹெட்டகொட


(கொழும்பு)

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகா சிறையிலடைக்கப்பட்ட பின்னர் வெற்றிடமான நாடாளுமன்ற ஆசனத்திற்கு அக்கட்சியின் அங்கத்தவர் ஜயந்த ஹெட்டகொடவின் பெயர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்ட ஐ.தே.மு. வேட்பாளர்களின் பட்டியலில் பொன்சேகாவுக்கு அடுத்ததாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்த லக்ஷ்மன் நிபுணாராய்ச்சியின் பெயர் மேற்படி (02ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை பிற்போடுவதா? இல்லையா?

# கட்சிகளின் செயலாளர்களை தேர்தல் ஆணையாளர் சந்திப்பார்



(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அனைத்து அரசியல் கட்சிகளின் பொதுச்செயலாளர்களையும் சந்திக்கத் தீர்மானித்துள்ளார். இச்சந்திப்பானது இவ்வாரம் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலையால் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் அது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்குத் தடை ஏற்பட்டுள்ளதுடன், மக்கள் தேர்தலில் அக்கறையற்றும் காணப்படு (15ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனு நிராகரிப்பை எதிர்த்து அரசு மனுத்தாக்கல்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக அம் முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவினால் 20 மேன்முறையீட்டு மனுக்கள் நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளன.


இம் மனுக்களில் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் பெயரிடப்பட்டுள்ளனர்.

வலிகாமம், கிளிநொச்சி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், காரைநகர், சாவகச்சேரி மற்றும் வேலணை உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு (16ஆம் பக்கம் பார்க்க)



கரவெட்டியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தின் போது...

# அரசியல் அங்கீகாரத்தை நேர்டோ ஒருபோதும் தேடமாட்டாது-கே.பி



(கொழும்பு)

நேர்டோ (North-East Rehabilitation and Development Organisation-NERDO) ஒருபோதும் அரசியல் அங்கீகாரத்தினை தேடாது என தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகார பொறுப்பாளராக செயற்பட்ட கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் நிதியுதவியுடன் செயற்படும் நேர்டோ என்ற அமைப்பு மனிதாபிமானப் பணிகளில் மாத்திரமே ஈடுபடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து கொழும்பிலிருந்து வெளியிடப்படும் ஆங்கில ஊடகமான ஐலண்ட் பத்திரிகையில் சமிந்திர பெர்னாண்டோ எழுதியுள்ள செய்திக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஜனவரி மாதம் 28ஆம் திகதி மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டு கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணமாகிய மாவட்டங்களுக்குச் சென்றிருந்த கே.பி. அங்கு தனது ஆதாரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய போது, தனக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் எதுவும் இல்லை என குறிப் (16ஆம் பக்கம் பார்க்க)

## கரவெட்டியில் விபத்து குடும்பஸ்தர் மரணம்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற லொறி-துவிச்சக்கர வண்டி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கரவெட்டி தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை துரைராசா (வயது 42) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

## பஸ் கட்டண அதிகரிப்பு இல்லை

(கொழும்பு)

எல்.ஐ.ஓ.சி நிறுவனத்தினால் அண்மையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.

எனினும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலையை அதிகரித்தால் பஸ் கட்டணங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சசி வெலிகம தெரிவித்தார். (ந-5)

## பொன்சேகா...

ஆசனத்திற்கு முதலில் பிரேரிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்த ஆசனம் பொன்சேகாவுக்கு உரியது என நிபுணாராய்ச்சி கருதியதால் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவில்லை.அவர் எம்.பியாக பதவியேற்பதற்குரிய 3 மாத கால அவகாசம் முடிபடைந்துள்ளதால் ஜயந்த ஹெட்டகொடவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. எனினும் அவரும் எம்.பியாக பதவியேற்கப் போவதில்லை எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

**தவறிவிட்டது**

சின்னாலடி,காரைநகர் எனும் முகவரியைச் சேர்ந்த யோகராசா சிவரஞ்சன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (613343288V) மற்றும் கோவளம்,காரைநகர் எனும் முகவரியைச் சேர்ந்த அருளம்பலம் நாகேஸ்வரி என்பவரின் தேசிய அடையாள அட்டை (665213021V) என்பன காரைநகருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும்.

தொடர்புக்கு – 27, பிரப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P:-0776140446
(3658)

## சீமெந்து கலவை இயந்திரம் வெடித்து எட்டுப் பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கே.கே.எஸ். வீதியில் கட்டிட நிர்மாணப் பணியில் பயன்படுத்தப்பட்ட சீமெந்துக் கலவை இயந்திரத்தின் குழாயில் ஏற்பட்ட வெடி விபத்து காரணமாக பணியாளர்கள் எட்டுப் பேர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு,

ஆசிம் நியாஸ் (31)-புத்தளம்,அப்துல் ரகுமான் (21)- அனுராதபுரம்,ஆர்.அஸ்கர் (23)- புத்தளம்,எச்.எம்.சுமித் (26)-புத்தளம், எச்.ஏ.காலும் மதுரங்க (17)- புத்தளம், டி.பி.கமல் சிறி (40)- புத்தளம், எஸ்.நிகால் (32),முகமட் ஜெனால் (43)- புத்தளம். (ந-5,51)

## இன்றும் நாளையும் மாங்குளம் ம.வி. இயங்காது

(மாங்குளம்)

மழை வெள்ளம் காரணமாக மாங்குளம் மகா வித்தியாலயம் இன்றும்,நாளையும் நடைபெறமாட்டாதெனவும்,

இதற்கான பதில் பாடசாலை எதிர்வரும் சனிக்கிழமைகளில் இடம்பெறுமெனவும் அதிபர் அறிவித்துள்ளார். (ந)

**STUDY IN UK**

யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய இறுதிச் சந்தர்ப்பம்
மிக விரைவான சேவை

மொத்த செலவு 7 லட்சம் மட்டுமே

MAR / APR INTAKE

- IELTS தேவையில்லை
- நீங்கள் வழங்கும் சகல பணமும் வங்கி மூலமாக செலுத்த முடியும். எம் மூலமாகவும் அத்தாட்சி பத்திரம் வழங்கப்படும்.
- யாழ். மாணவர்களுக்காக யாழில் உள்ளவரால் நேரடியாகச் செய்யப்படும் நம்பிக்கையான திருப்தி மிக்க சேவை
- A-Grade கல்லூரிகளிடமிருந்து நேரடியாக அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

இரு வாரங்களில் VFS இல் ஆவணங்கள் கையளிப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

- கல்லூரிக் கட்டணம் £ 1500 மட்டுமே
- நாம் குறிப்பிடும் காலத்தினுள் நீங்கள் U.K செல்லாவிட்டால் உங்கள் சகல பணத்தையும் மீளப் பெறலாம்.
- அனுபவமற்ற முகவர்கள் வழங்கும் போலி வாக்குறுதிகளை நம்பி அரிய இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.
- தேவையான ஆவணங்களுடன் உடன் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.

(Pass Port, கல்வித்தகைமைச் சான்றிதழ்கள் ,Birth Certificate)

தொடர்புகளுக்கு: Sana 0776277767
(3668)

# மரண அறிவித்தல்

## கனகரட்ணம் குமாரசாமி

### (சோதிடர், இ.போ.ச. முன்னாள் நடத்துனர்)



சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும், சங்கானை நிகரை வீதியை வதிவிடமாகவும் கொண்ட கனகரட்ணம் குமாரசாமி (சோதிடர், ஓய்வுபெற்ற இ.போ.ச. நடத்துனர்) 07.02.2011 திங்கட்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், சாந்தி (UK), சீதா (ஜேர்மனி), ராஜாஜி, காயத்திரியின் அன்புத்தந்தையும், பிரபாகரன் (UK), மாதவன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருண் (UK), ரமணன், அஸ்வினி (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும், நாகேஸ்வரி (ஜேர்மனி), நாகரட்ணம் (மணியம், சங்கத்தானை), சந்திரன் (சங்கத்தானை), திலகரட்ணம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.02.2011) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை இந்து கரச்சி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறோம்.

நிகரை வீதி,சங்கானை
T.P:0771606040

(3664)

தகவல்
கு.ராஜாஜி (மகன்)

# இன்று ஒரு தகவல்

## நாடக மேடை

"இந்த உலகமே ஒரு நாடகமேடை. நாம் எல்லோரும் நடிகர்கள்" இந்த உலகத்தில் எத்தனையோ நாடகமேடைகள் . எத்தனையோ நடிகர்கள். எத்தனையோ நாடகங்கள் .இதெல்லாம் எப்படி ஆரம்பமானது அது தான் இன்றைக்கு தகவல்.

ஆதிமனிதன் பேச ஆரம்பிப்பதற்கு முன் சைகையால் தானே எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருந்தான். அதனால் அப்பொழுது நடிப்பு ஆரம்பமாகிவிட்டது.

முதலில் ஒரு 'வேட்டை'யைத்தான் அவன் நடித்துக் காட்டியிருப்பான். இவன் எப்படிப் போனான்... எதிரில் மிருகம் எப்படி வந்தது? அதனுடன் எப்படி சண்டைபோட்டான்? எப்படி அடித்து கொண்டு வந்தான்.

இதை அப்படியே மற்றவர்களுக்கு நடித்துக் காட்டித்தானே புரிய வைத்திருக்க வேண்டும். இந்தக் காலத்தில் எல்லாம் நாடகங்களில் நடிப்பவர்களை நடிகர்கள் என்கிறோம்.

ஒரு காலத்தில் இவர்களுக்கு என்ன பெயர்தெரியுமா? "திஸ்பியர்கள்" இதற்குக் காரணம் உண்டு.

2000 ஆண்டுகளுக்கு முன் கிரிஸ் நாட்டில் திஸிபியஸ் என்று ஒரு ஆள் இருந்தான். அவன் ஒரு பெரிய நாடகக் கலைஞன். அவன் சில இளைஞர் களைச் சேர்த்து அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தான். நாடகக் குழுவை உருவாக்கினான். நடிகர்களையும் நாடகத்துக்கு தேவையான பொருட்களையும் ஏற்றிக் கொண்டு போவதற்கு ஒரு வண்டியையும் தயார்பண்ணினார்.

அந்த வண்டியில் அவன் கிரேக்க நாடு முழுதும் சுற்றினான். ஊர் ஊராக நாடகம் போட்டான். ஒரு ஊருக்குப்போனதும் அங்கே நாடகம் நடத்த "தியேட்டர்" இருக்கிறதா என்றெல்லாம் பார்ப்பதில்லை.

ஏனென்றால், அப்பொழுதெல்லாம் தியேட்டர் என்றால் என்னவென்று தெரியாது. நாடகம் என்றால் அதை ஒரு மூடிய கொட்டகைக்குள் தான் நடத்தவேண்டும் என்று அப்பொழுது யாருக்கும் தோன்றவில்லை.

இந்த வண்டிபோகும். அதில் ஒருபகுதி அப்படியே ஒரு மேடை மாதிரி விரிந்து கொள்ளும். அதில் ஏறி நின்று நாடகத்தை நடித்துக் காட்டுவார்களாம். மக்கள் எல்லாம் எதிரில் தரையில் உட்கார்ந்து அதைப்பார்ப் பார்களாம். உலகத்தின் முதல் நடமாடும் தியேட்டர் இதுதானாம்.

திஸிபியஸ் தான் உலகத்திலேயே முதன் முதலாக நாடகம் என்ற பொழுதுபோக்கை நடத்திக் காட்டியவன் என்று சொல்கிறார்கள். அவன் சொந்தமாக நாடகம் எழுதினான்– நடித்தான்– நாடகத்தை இயக்கினான்.

அதனால் தான் அவனை First Man of the Theatre என்று சொல்கிறார்கள். அவன் தான் நாடக மேடையின் முன்னோடி.

கிரேக்கர் காலத்திலேயே நாடக ஆசிரியர்கள்–நடிகர்கள்–ரசிகர்கள் –இவர்களெல்லாம் உருவாகிவிட்டார்களாம்.

நாடகத்தின் சரித்திரத்தில் இந்த மூன்று பிரிவும் மிகவும் முக்கியம்.

கிரேக்கர் தியேட்டர்களெல்லாம் திறந்த வெளிமேடைகள் தான்.

பெரும்பாலும் மலைச்சரிவுகள் ... அதுவே படிப்படியாகப் பண்ணியிருப்பார்கள். கீழே அரைவட்டவடிவில் மேடை.

அதற்கு "ஆர்கெஸ்ட்ரா" என்று பெயர். பிற்காலத்தில் இதில் உட்கார்ந்து இசைக்கு ழுவின் வாசித்ததனால் இசைக்குழுவிற்கே "ஆர் கெஸ்ட்ரா" என்ற பெயர் வந்துவிட்டது. கி.மு 340 காலத்தைய கிரேக்கத் தியேட்டர்களில் ஒன்றை இன்னமும் பாதுகாத்து வைத்திருக்கிறார்களாம். 'எபிடாரஸ்' என்ற இடத்தில் அது இருக்கிறதாம்.

இன்னமும் அந்தத் தியேட்டரைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார் களாம். சிறந்த கிரேக்க நாடகங்க ளெல்லாம் அங்கே நடிக்கிறார் களாம். ஆரம்ப காலத்தில் கட்டணம் இல்லை. பின்னர் தான் நுழைவுக்கட்டணம் முறை வந்தது.

நடிகர்கள் பளபளப்பான ஆடைகள் உடுத்தியிருப்பார்களாம். குதிக்கால் உயர்ந்த காலணிகள் போட்டிருப்பார்களாம். பலவித உருவங்களில் 'மாஸ்க்' என்று சொல்லப்படும் முகமூடி உண்டு. அதனால் ஒரே நடிகர் பல வேடங்களில் நடிப்பதுண்டாம்.

ஆரம்பத்தில் பெண்நடிகர்கள் இல்லை. எல்லாம் ஆண்நடிகர்கள் தான்.

ரோமானியர்கள் தான் முதலில் நிரந்தர நாடகமேடையைக் கட்டியவர்கள் அதுதான் முதல் தியேட்டர். கி.மு 1048 காலகட்டத்தில் 'பாம்பி' என்ற நகரத்தில் அதைக் கட்டியிருக்கிறார்கள்.

கிரேக்க உரோமானியத் தியேட்டர்களின் அடிப்படையில் இத்தாலிய வடிவமைப்பாளர்கள் குதிரை லாட வடிவில் ஒரு மண்டபத்தை உருவாக்கினார்கள்.

1576 இல் லண்டனில் பின்ஸ்பர்ரி பில்ட்ஸில் ஜேம்ஸ்பார்ப்போர்க் என்பவரின் ம்யற்சியால் தான் இங்கிலாந்தின் முதல் தியேட்டர் உருவானது.

உலக நாடக மேடையின் வரலாறு இதுதான். இப்பொழுதெல்லாம் அறிவியல் வளர்ச்சி அதிகமாகிவிட்டது. திரைப்படம், தொலைக்காட்சி எல்லாம் வந்து விட்டது.

ஒவ்வொரு வீடுமே ஒரு குட்டித்தியேட்டர் மாதிரி ஆகிவிட்டது. தொலைக்காட்சி முன் உட்கார்ந்தால் எழும்பவே மனம் வருவதில்லை.

ஒரு அம்மா மனோதத்துவ டாக்டர் ஒருவரைத் தேடி வந்தார்.

"டாக்டர், என் வீட்டுக்காரர் எப்பொழுது பார்த்தாலும் ரி.வி.முன் உட்கார்ந்து அதையே உற்றுப் பார்த்துக் கொண்டு இருக்கிறார். எனக்கு சந்தேகமாக இருக்கிறது"என்றார். "இது மனக்கோளாறு இல்லை. ஆர்வக் கோளாறு. அவ்வளவு தான். இதற்காகப் பயப்படாதீங்க" என்றார் டாக்டர்.

"அப்படியில்லை, டாக்டர் ரி.வி நிகழ்ச்சிகளை நாம் எல்லோரும் தான் பார்க்கிறோம்.

ஆனால், அவர் ரிவியை நிறுத்திய பிறகும் அதையே உற்றுப்பார்க்கிறார். எழுந்து வரமாட்டேன் என்கிறார். அதனால் தான் பயப்படுகிறேன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தனியார் நிறுவனங்கள் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச நிறுவனங்கள் மட்டுமல்லாது தனியார் நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த முன்வர வேண்டும் என யாழ்.அரசஅதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

டச் வூட் நிறுவனத்தின் கிளை நேற்று நாவலர் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தனியார் நிறுவனங்கள் இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்பை அதிகரிக்க வேண்டும். யாழ். மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த சிலமாதங்களாக பல அசம்பாவிதங்கள் இடம் பெற்று வருகின்றன. இந்த நிலை தற்போது கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளதாக பாதுகாப்பு தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு பற்றாக்குறை காரணமாகவே இவ்வாறான குற்றச்செயல்கள் இடம்பெற்று வருகின்றது. இதனை நிவர்த்தி செய்ய அரச மற்றும் தனியார் துறையினர் முன்வர வேண்டும்.

மேலும் யாழ். மாவட்டத்தில் தற்போது 6 இலட்சத்து 15 ஆயிரம் மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் எமது மாவட்டத்தில் பத்து இலட்சம் பேர் வாழக்கூடிய சூழ்நிலை யுள்ளது,

இதேவேளை இடம் பெயர்ந்து இந்தியாவில் தஞ்சமடைந்த எமது உறவுகள் மீண்டும் நாடு திரும்ப தயாராக உள்ளனர்.

அதுமட்டுமன்றி இது வரைகாலமும் உயர் பாதுகாப்புவலயங்களாக இருந்த பல பகுதிகளில் மக்கள் மீள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். இதனால் யாழ். மாவட்டத்தில் மக்கள் தொகை அதிகரிக்க வாய்புள்ளது.

எனவே மக்களின் பசுமையான வாழ்க்கைக்கு அரச நிறுவனங்கள் மட்டுமல்லாது தனியார் நிறுவனங்களும் உதவி செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-6)

# வெள்ளத்தால் பாதிக்கப் பட்டோருக்கு அவசர நிவாரண பணிக்காக 880 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வெள்ள அனர்த்தத்தினால் நிர்க்கதியாகியுள்ள கிழக்கு மாகாணம் உட்பட அநுராதபுரம், பொலனறுவை மாவட்ட மக்களுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள உலக உணவுத்திட்டத்தின் ஊடாக 6 மாத காலத்திற்கு அவசர நிவாரணப்பணிக்காக 880 மில் லியன் ரூபா ஒதுக் கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்ட நிவாரண பணிக்காக 600 மெற்றிக் தொன் அரிசி, பருப்பு, சீனி அடங்கிய பொருட்கள் அந்தந்த மாவட்ட அரச அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக பொருளாதார அபி விருத்தி பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் பணிப்புரைகளுக்கு அமைய இந்நிதி ஒதுக்கியுள்ளதாகவும் மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை உடன் வழங்கும் படி உலக உணவுத் திட்டப் பணிப்பாளர் குமாரசிறிக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார் (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 230 | 280 | 180 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 330 | 350 | 350 | 270 |
| தக்காளி | 150 | 150 | 160 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 55 | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 90 | 120 | 80 |
| கரட் | 80 | 100 | 140 | 90 |
| பூசணி | 50 | 50 | 80 | 40 |
| புடோல் | 70 | 120 | 120 | 80 |
| வாழைக்காய் | 35-40 | 60 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 250-300 | 300 | 240-280 | 270 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 120 | 80 |
| பாகற்காய் | 150 | 200 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 200 | 90 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 70 | 50 |
| பயற்றங்காய் | 150 | 320 | 300 | 190 |
| லீக்ஸ் | 100 | 150 | 200 | - |
| பீற்றூட் | - | 150 | 160 | 140 |
| கறிமிளகாய் | - | 250 | 300 | 270 |
| போஞ்சி | - | 200 | 280 | 140 |
| கத்தரிதம்புள்ள | 220 | 200 | 260 | 160 |
| கீரை - 1 பிடி | 15-20 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 70 | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |

# இராசி பலன்

08.02.2011
(தை 25, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 5.56 மணிவரை
ரேவதி பின்னிரவு 3.08 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
சுபநேரம் 11.05-12.35 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்** பொழுது போக்கு விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படும், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் விருப்பம் அதிகரிக்கும், சந்தித்தவர்களினால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**இடபம்** உற்றார், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், மனதிற்கினிய செய்திகள் வந்துசேரும்.

**மிதுனம்** கொள்கைப்பிடிப்போடு செயற்பட்டு கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள், புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள்நடைபெறும் நாள்.

**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தவறவிட்ட பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிங்கம்** அம்பிகை வழிபாட்டால் அமைதி காணவேண்டிய நாள், நட்பொன்று பகையாகலாம், பிரயாணங்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்துடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையலாம், பொருட்சேர்க்கையுண்டு.

**துலாம்** விருந்தினர் வருகையுண்டு, நல்லவர்களின் சிநேகிதம் அமையலாம், சுவாரஸ்யமான நாள், நல்ல செய்திகள் வந்து சேரும் நாள், உடல் நலம் சீராகும்.

**விருச்சிகம்** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முனைப்பு காட்டுவீர்கள்.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பு அமையலாம், தன்னம்பிக்கை அதிகரிக்கும், சுப செலவுகள் செய்து மகிழும்நாள், தாய்வழி உறவினர் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரும், சிலர் உங்களிடம் உதவி கேட்டுவரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொருளாதார நிலை உயரும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், புத்திசாதுரியமாக நடந்து சாதிப்பீர்கள்.

**மீனம்** கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், மாலை நேரப்பயணம் மகிழ்ச்சி தரும், அதிகாரிகள் ஒத்தாசை வழங்குவர், புத்திசாதுரியத்தால் வளம் காணும் நாள்.

வளவன்



டச்வூட் நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை நேற்று நாவலர் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி கேணல் குமுது வடுகொட நாடாவெட்டி திறந்து வைப்பதையும் நிறுவனத்தின் விற்பனை மேம்படுத்தும் அதிகாரி ஜெப்ரி ஈபேட் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ். அரச அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார், யாழ். பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறை பேராசிரியர் கு.மிகுந்தன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

## உதைபந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்புத்துறை)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் பாடசாலை அணிகளுக்கிடையில் வருடாந்தம் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் யாழ். மாவட்ட இணைப்பாளர் மா. பேட்டி பனிஸ்ரனுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-51)

## மழை காரணமாக வீதி சேதமடைந்துள்ளது

(வல்வெட்டித்துறை)

பருத்தித்துறையில் இருந்து வல்வெட்டித்துறைக்கான பிரதான வீதியானது அண்மையில் பெய்த மழை காரணமாக குன்றும் குழியு மாகக் காணப்படுகின்றது.

எனவே, மேற்படி வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மேற்படி வீதியால் பயணிப்போர் விபத்துக்குள்ளாகும் அபாய நிலையும் காணப்படுகிறது.எனவே, இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-63)

## மணவாளக்கோல உற்சவம்

பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தான கும்பாபிஷேகத் தினப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு சண்முகப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகக் கிரியை கள் ஆரம்பமாகி பகல் 11 மணிக்கு சங்காபி ஷேகம் இடம்பெறும்.

அத்துடன் மாலை 5 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி முருகப் பெருமானுக்கு திருக் கல்யாண உற்சவம், திருவூஞ்சல் ஆகியன இடம் பெற்று மின்சார தீபங்களினால் அலங் கரிக்கப்பட்டு பூந்தண்டிகையில் சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ஸ்ரீ)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட க.பொ.த. (உ/த) வகுப்பில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான யாப்பிலக்கணச் செயலமர்வு எதிர்வரும் 12, 13ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் பி.ப. 3 மணிவரை யாழ்.புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது என வட மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி செயலமர்விற்கு சமுகம் அளிக்கும் ஆசிரியர்கள் தரம் 12, 13 ஆகிய வகுப்புகளுக்குரிய ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியை எடுத்து வருமாறு கோரப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-3-19)

# பிரதான வீதிகள், சந்திகளில் பொலிஸார் ரோந்து நடவடிக்கை

(அல்வாய்)

பருத்தித்துறைப் பகுதியில் பிரதான வீதிகளிலும் சந்திகளிலும் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளிலும் சோதனை நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் புசல்லாவ தலைமையில் சனசமூக நிலையங்கள், கோவில்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய இடங்களில் இரவு 6 மணிக்குப்பின் வீதிகளில் நின்று கதைக்கும் இளைஞர்களை பொலிஸார் எச்சரித்து வருகின்றனர்.

மேலும் தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்று செல்லும் மாணவிகளிடம் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளும் இளைஞர்களையும் எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-19)

## வீதி விளக்குகள் இன்மையால் பயணிப்போர் பெரும் சிரமம்

(வல்வெட்டித்துறை)

ஊறணி வைத்தியசாலையில் இருந்து பருத்தித்துறை பிரதான வீதி, வல்வெட்டித்துறை-தொண்டைமானாறு வீதி, ஆதிகோவிலடி, தீருவில் ஆகிய பிரதேசங்களில் காணப்படும் சிறு வீதிகள் மற்றும் பிரதான வீதிகளில் இரவு வேளைகளில் மின் குமிழ்கள் ஒளிராமையால் மக்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். மேற்படி வீதிகளில் இரவு வேளைகளில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகும் அபாய நிலை உள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-63)

## அருள் ஒளி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் வெளியிடும் " அருள் ஒளி" தை மாத மலர் இம்முறை மஹா கும்பாபிஷேக விழா சிறப்பு மலராக வெளிவந்துள்ளது.

இந்நூலில் திருக்கோயில் வழிபாடு, துர்க்காபுரம் மகளிர் இல்லமும் இன்றைய வளர்ச்சியும்,எங்கள் கண்கண்ட தெய்வம், கும்பாபிஷேக தத்துவார்த்தம், தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி ஆலய வரலாறு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-9)

## புதிய நிர்வாகசபை தெரிவு

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக இ. சோதிலிங்கம்., உப தலைவராக எஸ். கந்தசாமி , செயலாளராக க.தர்ஷன், பொருளாளராக ச.தசிந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் 8 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (ஸ்ரீ-3-51)



கைதடி நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவை நேற்று முன்தினம் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல். ஜி.ஏ. சந்திரசிறி திறந்து வைப்பதை படத்தில் காணலாம். (படங்கள்:- என். குமார்)

## மஹோற்சவம்

திருநெல்வேலி ஸ்ரீ பூதநாத சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இத்திருவிழாவில் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்த உற்சவமும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-9)

## ஆசிரியர்களின் விபரம் கோரல்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் க.பொ.த. (சா/த) தமிழ் மொழியும் இலக்கியமும் இலக்கிய நயம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுடைய விபரங்களை உட னடியாக வடமராட்சி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான குழுநிலை விளையாட்டுப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி பிரதேசசபை கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளதாக தென்மராட்சி விளை யாட்டுக்கழக உத்தியோகத்தர் வே. சக்திவேல் தெரிவித்தார். (ஸ்ரீ-3-51)

### யாழ். செய்திகள்

## மெய்வல்லுநர் போட்டி

(அல்வாய்)

வல்வெட்டித்துறை அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நெடியகாடு விநாயகர் ஆலய முன்றலில் பாடசாலை அதிபர் பூ.சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத் தித்துறை கோட்டக் கல்விப்பணிப்பாளர் பா.இரகுநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

✡ ✡ ✡

(கொழும்புத்துறை)

கெற்பலி அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வீ.முத்துலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-51)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும்

## தேர்தல்கள் அலுவலகம் அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் திட்டமிட்டபடி நடக்கும் என்றும் எக்காரணம் கொண்டும் பிற்போடப்படமாட்டாதெனவும் தேர்தல்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதியே நடைபெறவுள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு போன்றவை அதற்குத் தடையாக இருக்காது என்று அவ் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 8 , 9ஆம் திகதிகளில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பையும்எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி உள்ளூராட்சி சபை தேர்தலையும் நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஸ்ரீ-2)

# பொன்சேகா சிறை வைக்கப்பட்டு இன்றுடன் ஒருவருட பூர்த்தி

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா சிறை வைக்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது. இன்றைய தினம் பாரியளவிலான எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை கொழும்பு மகசின் சிறைச்சாலைக்கு முன்பாக ஜன நாயகத்திற்கான மக்கள் இயக்கம் என்ற அமைப்பு நடாத்தவுள்ளது.

ஜே.வி.பி. கட்சியின் ஆசீர்வாதம், பக்கபலம் ஆகியவற்றுடன் இப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் சிறைச்சாலை வாசலுக்கு முன்னால் உட்கார்ந்து இப் போராட்டத்தை நடத்துவார்கள் என்று ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தேசிய கல்வியியற் கல்லூரிகளின் இறுதிப்பரீட்சை- 2010

(கொழும்பு)

கடந்த ஆண்டு நடைபெறவேண்டியிருந்த தேசிய கல்வியியற் கல்லூரிகளின் கற்பித்தலினான தேசிய டிப்ளோமா இறுதிப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறும்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து கடந்த 2010 ஆம் ஆண்டு மீள் பரீட்சைக்கு தோற்ற வேண்டியுள்ளவர்கள் இப் பரீட்சையை குறித்த திகதிகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எழுதுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மீள் பரீட்சை எழுத வேண்டியவர்களின் தொகை, ஒரு பரீட்சை மண்டபத்தை அமைப்பதற்கு போதுமானதாக இல்லாமையினாலேயே இப் பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பரீட்சை மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர் என பரீட்சைத்திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவையானோர் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்ணாட்டுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள். (ஸ்ரீ-2)

# 10ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்

## வல்லிபுரம் பூபாலு

ஆண்டு பத்து கடந்து சென்றாலும்

ஆறாத்துயர் இன்றும் ஓயவில்லை ஐயா!!!

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11.08.1936 | 29.01.2001 |

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.


குஞ்சர்வள்வு,
கரணவாய் மத்தி,
நவிண்டில்.

(சி-2412)

குடும்பத்தினர்

# 1ஆம் ஆண்டு நினைவில்

## கருணாகரன் சுதாகரன் (B.A)



08.02.2011

அன்னையின் மடியில் 1980.12.13

ஆண்டவன் அடியில் 2010.02.03

எமது குடும்பத்தின் முத்தான முதல் விளக்கே
அண்ணா எனும் அருமை உடன்பிறப்பே –நீ
உடலால் எமை விட்டுப்பிரிந்து ஓராண்டு
ஆனதடா ஆனாலும் உள்ளத்தாலும்
உயிராலும் இன்றும் எம்முடன் நீ இருக்கின்றாய்
என்றும் எம்முடன் நீ இருப்பாய்!

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அன்பு அப்பா, அம்மா,
தம்பி, தங்கைமார்.

நாகர்கோவில் தெற்கு

(சி-2411)

# மரண அறிவித்தல்கள்

## மத்தேசு தேவசகாயம் (சின்னத்துரை)



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிட மாகவும் கொண்ட மத்தேசு தேவசகாயம் 03.02.2011 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி மத்தேசு தம்பதியரின் அன்பு மகனும், அருளம்மாவின் அன்புக் கணவரும், சூசைப்பிள்ளை, சுவந்திரராசா, காலஞ்சென்ற பாலரத் தினம் மற்றும் இருதயராசா (ஜேர்மனி), ஜேம்ஸ் (பிரான்ஸ்), கிறிஸ்ரீனா, புஸ்பராசா (சுவிஸ்), அன்ரன் தேவதாஸ் (பிரான்ஸ்), மரியபற்றிமா ஜெயராணி (பிரான்ஸ்), கெல்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றீற்றம்மா, ஜசிந்தா (ஜேர்மனி), லலிதா, றோகினி (பிரான்ஸ்), செல்வராசா (செல்வம் ஆட்ஸ், சுன்னாகம்), செறின் (சுவிஸ்), எட்மன் (பிரான்ஸ்), தர்சினி (பிரான்ஸ்), சாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.02.2011) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அன்றையதினம் பி.ப 3.00 மணியளவில் கோப்பாய் தெற்கு புனித மரியன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதாகோயில் முன்பாக,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
செ.செல்வராசா (மருமகன்)
(செல்வம் ஆட்ஸ், சுன்னாகம்)
தொ.பே:0773361679

(சி-1084)

## திருமதி நடராஜா யோகம்மா



கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு நாகபூஷணி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா யோகம்மா (04.02.2011) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- அன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், அமரர் துரைசிங்கம் மற்றும் சரஸ்வதி, பரமேஸ்வரி, பத்மாதேவி, கமலாதேவி, தவமணிதேவி (மலேசியா), மகாலிங்கம் (நோர்வே), பரஞ்சோதிலிங்கம் இலங்காதேவி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், இராமுப்பிள்ளை, இரத்தினம்மா, இராசலிங்கம் (மலேசியா) மற்றும் நவரத்தினம் (கனடா), கமலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற ஜெயராஜன் மற்றும் ரேணுகாதேவி (ஆசிரியை, யா/இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்), நாகேஸ்வரி, நாமகள்தேவி (கனடா), நிர்மலன் (கனடா), நிர்மலா தேவி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவசோதி, ஜெயபாலசிங்கம், சிறிகாந்தன் (கனடா), கலைச்செல்வி (கனடா), தவலிங்கம் (கனடா) ஆகியோரின் மாமியாரும் சிவாஜினி, சிவசெந்தூரன் (யா/இந்துக் கல்லூரி மாணவன்), சாம்பவி (யா/வேம்படி உயர்தர பாடசாலை மாணவி), ஜெசிந்தன், ஐங்கரன் (யா/இந்துக் கல்லூரி மாணவர்கள்), சண்ஜா (கனடா), சுரேனியா (கனடா), நிதர்சியா (கனடா), சதுர்ஜன் (கனடா), நிவேதிகா (கனடா), வாணி (கனடா), வர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07.02.2011) நேற்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகபூஷணி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
தொ.பே: 0214591632

(சி-1082)

தகவல்:
குடும்பத்தினர்.


# யா-எல விலங்கியல் பூங்காவில் மூன்றாவது பாதை திறப்பு

யா-எல தேசிய வனவிலங்கியல் பூங்கா வுக்குள் நுழைவதற்கான மூன்றாவது பாதையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் திறந்து வைத்தார்.

இதன்மூலம் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு உல்லாசப் பிரயாணிகள் இந்த வன விலங்கியல் பூங்காவை முழுமையாகப் பார் வையிடும் வசதிகள் ஏற்பட்டுள்ளன. புத்தள -கதிர்காமம் வீதியில் அமைந் துள்ள இந்த வன விலங்கியல் பூங்காவைப் பார்வையிட வருடமொன்றுக்கு இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான உல்லாசப் பிர யாணிகள் வருகை தருவதாக வன பாதுகாப்பு திணைக்களம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் கிளிநொச்சிக்கு விரைவில் இடமாற்றம்

## பேராசிரியர் மிகுந்தன் தெரிவிப்பு



யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் மிக விரைவில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இட மாற்றப்படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக விவசாயத்துறைப் பேராசிரியர் கு.மிகுந்தன் தெரிவித்துள்ளார்.

டச் வூட் நிறுவனத்தின் கிளை நேற்று நாவலர் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

1990 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய பீடம் ஆரம்பிக்கப்பட்டது.

பின்பு நாட்டில் நடந்த யுத்தத்தால் 1997ஆம் ஆண்டு யாழ். பல்கலைக் கழகத்திற்கு இட மாற்றப்பட்டது. எனினும் மிக விரைவில் இப் பீடம் கிளிநொச்சிக்கு இடமாற்றப்படவுள்ளது.

இதேவேளை நடந்துமுடிந்த போருக் குப் பின்பு இந்த மண்ணுக்காக குறிப்பாக இயற்கைக்காக முதலீடு செய்வதற்காக டச்வூட் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரை தற்போது பல நிறுவனங்கள் தமது கிளைகளை இங்கு திறந்துள்ளன. ஆனால் இந் நிறுவனம் இயற்கைக்கு தமது முதலீட்டை ஆரம்பித்துள்ளமையால் இப்பகுதி அபிவிருத்தியை கருத்தில் கொண்டு செயற்படுவதோடு இயற்கையை பாதுகாக்க கூடியதாகவும் அமையவுள்ளது.

வடபகுதி வளங்களை பாதுகாக்க கூடிய வகையிலும் விவசாயத்துறையுடன் ஒத்துழைக்க கூடிய நிறுவனமாக இருப்பதனால் எமது விவசாயத்துறை இந்த நிறுவனத்திற்கு தனது ஆதரவை தெரிவித்து கொள்வதோடு இந்த நிறுவனத்துடன் இணைந்து தமது சேவையையும் மேற்கொள்ளவுள்ளதுஎன அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# சமூக மாற்றத்தை ஏற்படுத்தவே உள்ளூராட்சி தேர்தலில் போட்டி

## ஜே.வி.பி.தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)

இம் முறை உள்ளூராட்சி சபைத் தேர்த லில் போட்டியிடுவது சமூக. மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் ஜே.வி.பி. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான சந்திப்பில் நேற்று முன்தினம் பங்கேற்று உரையாற்றிய போதே கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பிரதேச சபை விவாதங்களின் போது பொதுமக்களை பங்கேற்பதற்கு ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர்களுக்கு சட்ட ரீதியான அனுமதி உள்ள போதும் பெரும்பாலானோர் அந்த அனுமதியைப் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்தார். ஸ்ரீ-2)

# தமிழக மீனவர்கள் தாக்குதல் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்

## ஜயலத் எம்.பி. வலியுறுத்தல்

(கொழும்பு)

தமிழக மீனவர் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர் தாக்குதல் பிரச்சினைகளினால் இலங்கைக்கு எதிரான கருத்துக்கள் வலுப்பெற்று வருவ்தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரச்சினைகள் தொடர்பில் இரு நாடுகளும் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதே சாலச் சிறந்ததென அவர் தெரிவித் துள்ளார்.

தமிழகத்தில் தேர்தல் நடைபெறவிருப்பதனால் இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களைத் தாக்குவதாக தீவிரப் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படக் கூடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் நாட்டில் வாழும் இலங்கை அகதிகள் மற்றும் தமிழக தனியார் மருத்துவக் கல்லூரிகளின் செயற்பாடுகள் குறித்தும் ஆராயும் நோக்கில் டாக்டர் ஜயலத் ஜயவர்தன அண்மையில் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்திருந்தார்.

கடந்த 1995ஆம் ஆண்டு முதல் இது வரையில் 570 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தோ அல்லது காயமடைந்தோ இருப்பதாக தமிழக அரசியல் வாதிகள் குற்றம் சுமத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கச்சதீவை மீளப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தீயசக்திகளை மௌனமாக்கும் வகையில் புலம்பெயர் தமிழர்கள் செயற்பட வேண்டும்

## பாதுகாப்பு செயலர் கோரிக்கை

(கொழும்பு)

தீய சக்திகளின் தவறான பிரசாரங்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் துணை போகக் கூடாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் வடக்கு -கிழக்கு அபிவிருத்திக்கு புலம்பெயர் தமிழர்கள் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனின் அழைப்பை ஏற்று அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர் தமிழர்கள் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

இந்தப் புலம்பெயர் தமிழர்களுடன் நடைபெற்ற விசேட சந்திப்பின் போது பாதுகாப்புச் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு- கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து இந்தப் பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தீய சக்திகளை மௌனமாக்கும் வகையில் புலம்பெயர் தமிழர்கள் வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பணிகளில் பங்களிப்பு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)


- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

JAN 2011 TO JUN 2011

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டி. மா.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டி. மா.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.02.2011


# பொரளை தாக்குதலின் பின்னணியில் ஆளும் கட்சி அரசியல்வாதி

## கரு ஜெயசூரிய எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)


புஞ்சி பொரளை தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் ஆளும் கட்சி அரசியல் வாதியொருவர் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதி ஒருவரினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான தாக் குதல்களுக்கு தமது கட்சி அஞ்சாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாக்குதல் சம்பவம் குறித்து பொலிஸார் நடத்தும் விசாரணைகள் தொடர்பில் தமக்கு எவ்வித நம்பிக்கையும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். குண்டர் கூட்டம் தாக்குதல் நடத்தும் போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பொலிஸார் விசாரணை களின் போது நியாயமாக நடப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக நடத்தப்பட்ட போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தின மன்று சுதந்திரமாக போராட்டமொன்றை நடத்த முடி யாத நிலை ஏற்பட்டுள்ள தாக




அவர் குற் றம்
சுமத்தியுள்ளார்.

மேலும் கரு
த்துச் சுதந்திரம்
முடக்கப்பட்டு
வருதாக அவர்
குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை புஞ்சி பொரளை தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாளை புதன்கிழமை பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்படும் என அவர் செரிவிக்குள்ளார். (ஸ்ரீ-2)

# கள்ளிக்காட்டு இதிகாசம்



கவிப்பேரரசு வைரமுத்து

**34**

கன இருட்டில் கரடேறியது, சூரம்புதர் கைகிழித்துக் காயம் ஆனது, ஊறல் பானைகளை எத்தி உடைத்தது, சாராய அடுப்பில் எரிந்து கொண்டிருந்த தீயை இருகைகளிலும் அள்ளி, சாராயக் கூட்டாளிகளின் மூஞ்சியில் வீசியடித்தது. 'தங்கத்துக்கு வாங்குன எம் பேரன எலும்பெடுத்து வரவாடா சொன்ன நாயே' என்று சின்னுவை விறகுக்கட்டை எடுத்து விரட்டியது, 'இதெல்லாம் ஒரு பொழப்பு... நீ ஒரு பொறப்பு'ன்னு திட்டி சின்னுவின் மூஞ்சியில காறி உமிழ்ந்தது, பதிலுக்கு அவன் 'என்னச் செவக்கி வளக்கத் தெரியாத நீ ஒரு அப்பனாடா'ன்னு வெலாவுல வெட்டருவா எடுத்து வெட்னதுமாதிரி கேட்டது... இதெல்லாம் வருத்தமில்லை பேயத்தேவருக்கு.

சின்னு கேட்ட ஒரு கேள்விதான் அவர் நெஞ்சில் யாரோ கல்லைக் கட்டி விட்டது மாதிரி கனத்தது.

"உழுக நெலமில்ல... ஒக்கார இடமில்ல... கஞ்சி காச்சக் காசில்ல - காச்சி ஊத்தப் பொண்டாட்டியில்ல... சாராயம் காச்சாம வேற என்ன பண்ணச் சொல்ற?" என்று கேட்டான் சின்னு.

"மூணு முழம் கயிறு... முக்காரூவா வெசம்... ரெண்டுல ஒண்ணுமா கெடைக்கல...? சாராயங்காய்ச்சற பொழப்புக்குச் சாகிறது!"

"நா ஏஞ் சாகணும்? புருவம் நரைச்சுப்போன எழுவது வயசுக் கிழட்டுப்பய நீயி, ஆத்தாள வைத்தியம் பாக்காமக் கொண்டுபுட்டு ஆசப்பட்டவகூடக் குடும்பம் நடத்திக்கிட்ருக்க... ஒனக்கே அம்புட்டு இருந்தா எனக்கு எம்புட்டு இருக்கும்?"

அவன் கேட்ட கேள்வியில் கோபமெல்லாம் வத்திப்போய், விண்டுபோன நெஞ்சோடு விம்மிவிம்மி அழுதுகொண்டு சூராம்புதர் கிழித்த காயத்தில் கள்ளிப்பால் அடித்து மண்தள்ளி மருந்துபோட்டு நடுச்சாமத்தில் வீடுவந்து சேர்ந்தது முதல், பகலிலெல்லாம் வாய்க்கா வரப்பு எடுத்துக்கட்டிவிட்டு வீடு திரும்பி மாட்டுக்குப் பருத்தி விதை ஆட்டிக்கொண்டிருக்கும் இந்த நிமிசம் வரைக்கும் உள்கூடு அறுத்துக் கொண்டிருந்தது அவன் கேட்ட அந்த ஒரே ஒரு கேள்வி. 'அழகம்மா! நீ இருந்திருந்தா ஒம்புருசன இப்படி ஒரு கேள்விய ஒம் மகன் கேட்டிருப்பானா?'

நடைவாசல் ஓரமாய் வெட்டுக்கட்டையில் வைத்துச் சோளத்தட்டை வெட்டிக்கொண்டிருந்தான் தாத்தாவின் பக்கம் முதுகு திருப்பிக்கொண்டு மொக்கராசு. அவன் மூஞ்சியைப் போலவே வார்த்தையும் இறுகிக் கிடந்ததால் ஒரு பேச்சும் பேசவில்லை ஒரு நாள் முழுக்க. தாத்தாகூடப் பேசாம இருக்கமுடியல. யாரோ கடப்பாரையைக் கழுத்துக்குள்ள வச்சு அழுத்துன மாதிரியே இருந்துச்சு. எதப்பேச? எப்படிப் பேச?

அப்போதுதான் அந்த எதிர்பார்க்காத விருந்தாளி வந்து சேர்ந்தான். ஒரு ஓரமாய் கட்டைச் செருப்பைக் கழற்றிவைத்துவிட்டு நன்றாய் இருந்த வேட்டியை மீண்டும் அவிழ்த்து மடித்துக் கட்டிக்கொண்டு, இடுக்கிய கண்களை வீசி ஒரே பார்வையில் எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்டு, நெஞ்சிலிருக்கும் தயக்கத்தைச் சுண்டுநடை சொல்ல, சிரித்தல் என்ற தொழிலையே செய்திராத கறுப்பு உதடுகளை இன்னும் இறுக்கமாக்கிக் கொண்டு, பருத்தி விதை ஆட்டிக்கொண்டிருந்த பேயத்தேவரைப் பார்த்தும் பாராமல் கடந்து, தாழ்வாரமடைந்து தோள்துண்டை எடுத்துத் தரையில் ஒரு அடி அடித்து உதறி, உணர்ச்சியில்லாமல் உட்கார்ந்தான் ஒச்சு.

"வா மாப்ள"

'வாரேன்' என்பதற்கு அடையாளமாய் அவன் தலையாட்டினான்.

"செல்லத்தாயி... புள்ளயெல்லாம் சொகமா?"

பேயத்தேவர் கொஞ்ச நேரம் வாய் திறக்கவில்லை; கருமமே கண்ணாயினார்.

"பயமேல பாசம் வந்திருச்சாக்கும் ஆத்தாளுக்கும் அப்பனுக்கும்..."

"அப்படித்தான் வச்சிக்கிருங்க"

"வச்சிக்கிறணுமா... அப்ப வரலையா...?"

"ஏதோ ஒண்ணு... கூட்டிக்கிட்டுப் போகத்தான் வந்திருக்கேன்"

"அனுப்பச் சொல்றிகளா... கூட்டிட்டுப் போறிகளா?"

"குங்குமம் வேற... செந்துருக்கம் வேறயா... ஆறு வேற... நதி வேறயா...? அனுப்புனாலும் கூட்டிட்டுப் போனாலும் கத ஒண்ணுதான்..."

"அதெப்படி...? அனுப்பாமக் கூட்டிட்டுப் போகமுடியுமா?"

முருகாயி கொண்டுவந்து வைத்த பாலை மோந்து பார்த்து ஒருவாய் குடித்து ஓரமாய் வைத்தான்; தொண்டையைக் கனைத்துக்கொண்டு இழுத்திழுத்துப் பேசினான் ஒச்சு.

"மாமு வேறொண்ணுமில்ல. சின்னப்புள்ள நொய் நொய்ன்னு அழுகுது; வேல செய்ய விடுதில்ல. ரெண்டு மாடு வேற வாங்கிரிக்கேன். மேய்க்க ஆளில்ல. நான் ஒத்த ஆளாக் கல்லுக்காட்ட என்னைக்கிக் கரசேர்றது? மொக்கராசு வந்துட்டா ஆளும்பேருமா ஆளுக்கொரு வேலயச் செய்யலாமில்ல..."

"அதுகளுக்கென்ன... கெழங்குமாதிரி கெடக்குக..."

வந்தவன் யாரென்று தெரிந்துகொண்டதும் திரும்பிப் பார்க்காமல் தன் தொழிலில் இன்னும் தீவிரமானான் மொக்கராசு.

இவன் ஏன் வந்தான் எதுக்கு வந்தான்னு தன் புத்திக்கெட்டிய மட்டும் யோசிச்சு ஒண்ணும் புடிபடாத பேயத்தேவர் எங்க ஆரம்பிக்கிறதுன்னு தெரியாமத் திக்கித் திணறிப் போனார் பாவம்.

"ஏ முருகாயி! மாப்ளைக்கிப் பால் சுடவச்சுக் கொண்டாந்து குடு"

அவள் அடுப்பில் கூட்டிவைத்த கத்தரிக்காய்க் குழம்புச் சட்டியை எடுத்துவிட்டு ஒரு பழைய சட்டியைக் கழுவிப் பால் சுடவைத்தாள்.

வெடைச்ச மனசுக்காரர்களின் பேச்சு என்பதனால் சலசலவென்று பேச்சு வரவில்லை. புண்ணாக்கில் எண்ணெய் எடுப்பது மாதிரி இறுகிப்போன மனசிலிருந்து சொல்லேதும் கசியவில்லை.

பருத்திவிதை ஆட்டிக்கொண்டே பேச்சைத் தொடர்ந்தார் பேயத்தேவர்.

"நல்லநாளும் பொழுதுமா ஒத்த ஆளா வந்திருக்கீக... செல்லத்தாயக் காணோம்... என்ன மாப்ள விசேசம்?"

"மொக்கராசக் கூட்டிக்கிட்டுப் போகலாம்னு வந்தேன்" என்றான் ஒச்சு.

அந்த வார்த்தையைக் கேட்டு வெட்டினானோ - கேட்காமல் வெட்டினானோ தெரியாது - மொக்கராசு வெட்டிய சோளத்தட்டையில் ஒண்ணு வெட்டுக்கட்டையை விட்டு எகிறிப் பறக்க, அது கூரை மேல இருந்த கோழியைப் போயி அடிக்க, அது "கெக்கெக்கெக்கே" என்று பயந்து பறந்தது.

அதுவரைக்கும் பருத்தி விதையை ஆட்டிக் கொண்டேயிருந்த பேயத்தேவர் ஆட்டுவதை நிறுத்திவிட்டு இரண்டு கைகளாலும் தலையிலடித்துக்கொண்டார். அவரது கையிலிருந்த பருத்தி விதை மாவு அவர் அடிக்க அடிக்கத் தலையில் அப்பிக்கொண்டது.

"ஏய்யா... இப்பகூட அந்தப் பயல ஒம் மகனாக் கூப்பிடாம மாடு மேய்க்கிற பயலாத்தானய்யா கூப்பிடுற. அவன ஒம் மகனாகவும் சேக்கல. செல்லத்தாயி மகனாவும் பாக்கல. பண்ணைக்கிருக்க ஆளனுப்புன்னு பகுமானமா வந்து கேக்குற. அவனே வாரேன்னாலும் அனுப்பமாட்டேன்... எந்திரிச்சுப் போ."

ஒச்சு எழுந்து கொண்டான். உதறுகிற பாவனையில் துண்டை எடுத்துச் சுவரிலடித்தான். பிறகு கீழே குனிந்து பாலை எடுத்து ஒரே மடக்கில் குடித்து முடித்தான்.

"மாமு! வீட்டு ஒத்தாசைக்கு ஒரு பொம்பளையைச் சேத்திருக்க. காட்டு ஒத்தாசைக்கு ஒரு ஆம்பள வேணாமா...? அவன நீயே வச்சுக்க..." - எகத்தாளமாய் ஒரு நொட்டச்சொல் பேசிவிட்டு வழக்கம்போல் வேட்டியை எத்தி உதறி இடுப்பில் கட்டிக்கொண்டு, செருப்புக்களைச் சரியாய்ப் போட்டும் போடாமலும் வந்தவேகத்தில் போய் விட்டான் ஒச்சு.

பேயத்தேவர் மனசு பேதலித்துப் போனார்.

(வளரும்)



# வெள்ள நிவாரணப் பொருட்கள் உரியவர்களை சென்றடையவில்லை

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட பல அமைப்புக்களினால் வழங்கப்பட்ட வெள்ள நிவாரணப் பொருட்கள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் வீடுகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

வெள்ள நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவு தொகைகள் உரிய முறையில் பாதிக்கப்பட்டவர்களை சென்று சேரவில்லை என ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நிவாரணப் பொருட்கள் முறையாக விநியோகம் செய்யப்படாத காரணத்தினால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு வழங்கப்பட வேண்டிய நட்ட ஈட்டுத் தொகை மாவிலாறு விவசாயிகளுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நகரப் பிரதேசங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்கப்பட்ட போதிலும் கிராமப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்கப் பட வில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உணவு நிவாரணங்களும் அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை அமர்வு மீள ஒத்திவைப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அம்பாறை அமர்வுகளை மீளவும் ஒத்திவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோசமான காலநிலையினால் அம்பாறையில் நடத்தப்படவிருந்த அமர்வுகள் ஏற்கனவே ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது பிரதேசத்தில் நிலவி வரும் சீரற்ற கால நிலையினால் மக்களை சந்தித்து சாட்சியங்கள் திரட்டுவது நடைமுறைச் சாத்தியமற்றதென அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு அமர்வுகளை நடத்த வேண்டாம் என அம்பாறை அரசாங்க அதிபர் உண்மையக் கண்றியும் ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ள நிலைமை வழமைக்குத் திரும்பியதன் பின்னர் அம்பாறைக்கான விஜயம் மேற்கொள்ளப்படும் என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஸ்மன் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறு மாத காலமாக திரட்டப்பட்ட சாட்சியங்களை ஆய்வுசெய்து அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக் குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை ஏவி வீதி, சென்மேரிஸ் இரண்டாம் ஒழுங்கையிலும் காலை 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை விதான்ஸ் ஒழுங்கை , கொழும்புத்துறை ஆகிய இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே , இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிச் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு 5 நாட்களுக்கு தொடர்ச்சியாக நிவாரணம்

## அமைச்சர் மகிந்த அமரவீர உத்தரவு

(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு நிவாரணங்களை ஐந்து நாட்களுக்கு தொடர்ச்சியாக வழங்குமாறு அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் மகிந்த அமரவீர பிரதேச செயலாளர்களுக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் தொடர்பான உயர் மட்டகூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

மாவட்ட அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜய விக்ரம, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் மகிந்த அமரவீர, நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், பிரதி அமைச்சர்களான சுசந்த புஞ்சிநிலமே, எம்.கே. டி. எஸ். குணவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, எம்.எஸ். தௌபீக் மற்றும் பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுற்று நிருபத்தை காரணம் காட்டாது தேவைப்படும் பட்சத்தில் அரசாங்க அதிபரின் ஆலோசனைக்கமைய மக்களுக்குதேவையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார். (ஸ்ரீ)

# அவசரகாலசட்டப் பிரேரணை மீதான விவாதம் இன்று

(கொழும்பு)

அவசரகால சட்ட பிரேரணை மீதான விவாதம் 118 மேலதிக வாக்குகளால் சபையில் கடந்த ஜனவரி மாதம் 18 ஆம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இப் பிரேரணை மீதான விவாதம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத்தின் ஜனவரி மாதத்திற்கான அமர்வு கடந்த 18 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

இந் நிலையில் அமெரிக்காவுக்கு தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலில் 18 ஆம் திகதியிட்டே கையொப்பமிட்டிருந்தார்.

அந்த வர்த்தமானி அறிவித்தல் 10 நாட்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்பதால் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை மீது கடந்த 18 ஆம் திகதி விவாதமின்றி வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றிக்கொள்ளப்பட்டது. அந்தப் பிரேரணை மீதான விவாதமே இன்று நடை பெறுகிறது.

அன்றைய வாக்கெடுப்பின் போது பிரேரணைக்கு ஆதரவாக ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனநாயகத் தேசியக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இதன் பிரகாரம் பிரேரணைக்கு ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 5 வாக்குகளும் கிடைத்தன. (ஸ்ரீ-2)

# சரத் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி இன்று சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

சிறைவைக்கப்பட்டுள்ள சரத்பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு மகஸின் சிறைச்சாலை முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக ஜே.வி.பி. எம்.பி விஜித ஹேரத் அறிவித்துள்ளார்.

இப்போராட்டத்தில் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

பெலவத்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே விஜித ஹேரத் எம்.பி. இந்த அறிவிப்பை வெளியிட்டார்.


இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுக்கையில்,

இப்போராட்டமானது ஜே.வி.பி. க்காக செய்யப்படவில்லை. நாட்டு மக்களின் நன்மைக்காக, ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படவுள்ளது. எமது நாட்டின் 63 ஆவது சுதந்திர தினத்தன்று சுதந்திரமாக ஜனநாயகப் பேரணியை நடாத்த முடியாதுள்ளது. ஐ.தே.கட்சி பேரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசாங்கத்தின் குண்டர்களே இதனை நடத்தினர்.

எனவே நியாயமான விசாரணைகளை எதிர்பார்க்க முடியாது. குற்றவாளிகளும் சட்டத்தின் முன் நிறுத்தப்படமாட்டார்கள். ஊடக நிறுவனங்கள் தீ வைக்கப்படுகின்றன. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டுகின்றனர். இது வரையில் எவரும் கைது செய்யப்படவில்லை அரசாங்கத்தின் ஜனநாயக விரோதச் செயல்களை முழு உலகமே இன்று புரிந்து கொண்டுள்ளது.

இதனைத் தொடர இடமளிக்க முடியாது. எனவே, பொதுமக்கள் அச்சமின்றி போராட்டங்களுக்கு முன்வர வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)





பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் கிளிநொச்சி, வட்டக்கச்சியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. இதில் கோழிக்குஞ்சுகள் மற்றும் பசுவும் கன்றும் என்பன கால்நடை வைத்தியர் செல்வி லேகா மரியதாசனால் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதையும் அருகில் சுவாமி சித்ரூபானந்தா நிற்பதையும் படங்களில் காணலாம்.





ஹைசன் நிறுவனமும் டி.எவ்.சி.சி. வங்கியும் இணைந்து நடத்திய முன்னோடியான சமூகத்தை நோக்கி எனும் செயற்றிட்டமும் யா/ கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலயத்தில் 6எஸ் மற்றும் 3ஆர் செயற்பாடுகளை முன்னெடுத்தல் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை அதிபர் ச.வாமதேவன்,கல்வியமைச்சின் ஹைசன் செயற்றிட்டப் பணிப்பாளர் ஜனானி திலக்ரட்ண ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# ஆயுதப் போராட்டம் ஏற்பட்டமைக்கான காரணிகள் கண்டறியப்பட்டுள்ளது

## பிரான்ஸிற்கான இலங்கைத்தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் ஏற்பட்டமைக்கான காரணிகளை இலங்கை அடையாளம் கண்டுள்ளதாக பிரான்ஸிற்கான இலங்கை தூதுவர் தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

பரிசில் நடைபெற்ற இலங்கையின் 63 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கிய ஆயுதப் போராட்டம் எதனால் ஏற்பட்டது. எவ்வாறான சந்தர்ப்பத்தில் யுத்தத்திற்கு வழிகோலியது என்பது தொடர்பிலும் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மூன்று தசாப்த காலமாக நீடித்த யுத்தத்திற்கான அடிப்படை சந்தர்ப்பங்கள் இனங்கண்டு கொண்டதையிட்டு பெருமையடைவதாகவும் கடுமையான ஆயுதப் போராட்டத்திலிருந்து நிலையான சமாதானம் நோக்கி நாடு முன்நகர்ந்து கொண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சமாதானத்தை மக்களின் மனதில் உருவாக்க வேண்டும் எனவும் சமாதானத்தில் அடித்தளம் நீதி, நியாயம், சமவுரிமை மற்றும் ஜனநாயகம் ஆகிவற்றில் தங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பௌதீக ஒருமைப்பாட்டை நிலைநாட்டும் நெருக்கடியான போராட்டத்தில் இலங்கைக்கு சர்வதேச நாடுகள் வழங்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# முள்ளிப்பொத்தானையில் இரு சடலங்கள் மீட்பு

திருகோணமலை முள்ளிப்பொத்தானை 97 ஆவது மைல் கல்லுக்கு அருகிலுள்ள வயல் வெளியிலிருந்து இருவரின் சடலங்கள் நேற்று முன் தினம் காலை மீட்கப்பட்டுள்ளன.

கல்மெட்டியாவ பகுதியைச் சேர்ந்த சாலிய அசோக பிரியதர்சன (வயது 22), உள் பத்தவைச் சேர்ந்த ஹேரத் முதியன்சலாகே டிகிரி பண்டா (வயது 46) என்பவர்களது சடலங்களே மீட்கப்பட்டுள்ளதாக தம்பல காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களது சடலமாகவே இவை இருக்கலாமெனக் கருதப்படுகிறது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# வெள்ளம் பாதித்த பகுதிகளில் தேர்தலை ஒத்தி வைக்கவும்

## அமைச்சர் விமல் கோரிக்கை

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிடம் வீடமைப்பு, நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் அமைச்சர் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

இப்பகுதிகளில் எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி தேர்தலை நடத்துவது பொருத்தமானதல்ல என தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் கோரியுள்ளார். வடக்கு,கிழக்கு, மத்திய ,ஊவா, வட மத்திய மாகாணங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வடக்கு மாகாண சபையிலிருந்து மத்திய அரசுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

வடக்கு மாகாண சபையிலுள்ள காணி நிர்வாக திணைக்களத்தில் கடமையாற்றி வந்த ஐந்து நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் காணி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களிற்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் பிரதேச காணிப்பயன்பாடுகள் சம்பந்தமான வேலைகளை மேற்கொள்வதற்காக காணிப் பயன்பாட்டுத்திட்டமிடல் உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

தில்லையம்பலவாணர் விமலன் (கோப்பாய் பிரதேச செயலகம்), திருமதி செல்வகுமார் சிவலட்சுமி (கரவெட்டிப் பிரதேச செயலகம்), திருமதி ரி.ஜெயவதனா (சாவகச்சேரி பிரதேச செயலகம்), திருமதி நகுலாதேவி பத்மராசா (பருத்தித்துறை பிரதேச செயலகம்), திருமதி திலகராணி ஜெயக்குமார் (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஆகியோரே நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த 2010 ஆம் ஆண்டுவரை இத்திணைக்களம் காணி அமைச்சின் கீழ் ஒரு பிரிவாக செயற்பட்டு தற்போது தனியானதொரு திணைக்களமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

2010.02
08

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1587 - இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத் மகாரணியை கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஸ்கொட்லாந்து அரசி முதலாம் மேரி தூக்கிலிப்பட்டாள்.

★1622 - இங்கிலாந்தின் முதலாம் ஜேம்ஸ் மன்னன் இங்கிலாந்தின் நாடாளு மன்றத்தைக் கலைத்தான்.

★1761 - லண்டனில் நிலநடுக்கம் பதியப் பட்டது.

★1849 - புதிய ரோமன் குடியரசு அமைக்கப் பட்டது.

★1900 - போவர் போர்: தென்னாபிரிக்காவில் லேடிஸ்மித் என்ற இடத்தில் பிரித்தானியப் படைகள் போவர்களினால் தோற்கடிக்கப்பட்டனர்.

★1904 - சீனாவின் லூஷென்கோ (முன்னர் போர்ட் ஆர்தர்) நகரை ஜப்பான் தாக்கியது.

★1924 - ஐக்கிய அமெரிக்காவில் மரண தண்டனைக்கு முதற் தடவையாக நச்சு வாயுவை பயன்படுத்தும் முறை நெவாடாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

★1942 - ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் நேதாஜி ஜேர்மனியை விட்டுத் தெற்காசியாவுக்குப் புறப்பட்டார்.

★1956 - இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் களனி மாநாட்டில் அறிவிக் கப்பட்டது.

★1963 - கியூபாவுடனான போக்குவரத்து, பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் ஐக்கிய அமெரிக்க மக்களுக்கு தடை செய்யப்பட்டதாக ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடி அறிவித்தார்.

★1971 - நாஸ்டாக் பங்குச்சந்தைக் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டது.

★1974 - 84 நாட்கள் விண்ணில் சஞ்சரித்த பின்னர் முதலாவது அமெரிக்க விண்வெளி ஆய்வுகூட ஸ்கைலாப் 4 வீரர்கள் பூமி திரும்பினர்.

★1974 - அப்பர் வோல்ட்டாவில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.

★1989 - போர்த்துக்கலில் போயிங் 707 விமானம் ஒன்று சாண்டாமரியா மலையில் மோதியதில் 144 பேர் கொல்லப்பட்டனர்.

★2005 - இஸ்ரேலும் பாலஸ்தீனமும் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டன.

### பிறப்புகள்

★1700 - டானியல் பேர்னோலி, கணிதவியலாளர் (இ.1782)

★1828 - ஜூல்ஸ் வேர்ன், பிரெஞ்சு எழுத்தாளர் (இ.1905)

★1834 - திமீத்ரி மெண்டெலீவ், ரஷ்ய வேதியியலாளர் (இ.1907)

★1897 - ஜாகிர் உசேன், இந்தியாவின் மூன்றாவது ஜனாதிபதி (இ.1963)

★1963 - மொகமட் அசாருதீன், இந்திய அணியின் முன்னாள் துடுப்பாளர்.

### இறப்புகள்

★1804 - ஜோசப் பிரீஸ்ட்லி, ஆங்கிலேய வேதியியல் அறிஞர் (பி.1733)

★1889 - சொலமன் ஜோன்பிள்ளை, எழுத்தாளர், சிலோன் பேட்ரியட் பத்திரிகையாசிரியர்.

★1975 - றொபர்ட்றொபின்சன், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய வேதியியலாளர் (பி.1886)

★1993 - நா.சண்முகதாசன், ஈழத்தமிழ்த் தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி (பி.1920)

**அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமை ஆர்வலருமான அரியநாயகம் சந்திரநேருவின் 6ஆவது நினைவு தினம் இன்றாகும். (இ.2005)**

# திருப்பங்கள் தித்திக்கும் !

நீங்கள் ஆசைப்பட்ட எத்தனையோ விஷயங்களை, கிடைக்குமோ கிடைக்காதோ என்று அச்சத்தால் கை நழுவ விட்டிருக்கிறீர்கள். புதிய முயற்சிகளில் பங்குகொள்ள துணிச்சலின்றி வாய்ப்புகளை இழந்திருக்கிறீர்கள்.

இசை, ஓவியம் போன்ற இனிமையான கலைகளை சொல்லித்தரும் கல்லூரிகளை வலைவீசித்தேட வேண்டியிருக்கிறது.

ஆனால், தெருவுக்கு ஒரு பொறியியல் கல்லூரி என்ற நிலை விரைவிலேயே வந்துவிடும் போல் இருக்கிறது. வருடத்துக்கு வருடம் லட்சக்கணக்கில் வெளியே அனுப்பப்படும். இஞ்ஜினீயர்களுக்கு வேலை கிடைக்கிறதோ இல்லையோ, அந்தப்படிப்பை எப்படியாவது தங்கள் மகனுக்கும் மகளுக்கும் கொடுத்



துவிடவேண்டும் என்று பெற்றோர் தவிக்கிறார்கள் ஏன் இப்படி?

ஒருகாலகட்டத்தில் அந்தப்படிப்பு முடித்ததும் வேலைகிடைத்து கொண்டிருந்தது. உடனே அதுதான் உலகின் பத்திரமான பந்தயம் என்று தங்கள் பிள்ளைகளை பகடைக்காய்களாக பெற்றோர் உருட்ட ஆரம்பித்து விட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை மனித உடல் கிடைத்துவிட்டாலும் மனதளவில் பரிணாம வளர்ச்சி செம்மறியாட்டின் தன்மையோடு நின்றுவிட்டது போலத்தான்!

ஆயிரம்பேர் செய்வதைத்தான் செய்வார்கள். சுயமாக எந்தமுடிவு எடுக்கவும் துணியமாட்டார்கள். ராத்திரிப்பகலாக இதையே சொல்லிச் சொல்லித் தங்கள் பிள்ளைகளின் மனதையே மந்தமாக்கி வைத்திருப்பார்கள்.

நான்பொறியியல் துறையை மட்டும் குறிப்பிட்டு சொல்லவில்லை. எந்தத் துறையாக இருந்தாலும், அதைநீங்கள் ஆசைப்பட்டுத் தேர்ந்தெடுத்திருந்தால், வரவேற்கலாம். பிழைப்புக்காக அந்தத் துறையை தேர்ந்தெடுத்தீர்கள் என்றால், உங்கள் வாழ்க்கையை அல்லவா வீணடித்து விடுவீர்கள்?

இதுதனக்குத்தேவையா, உலகத்துக்குத் தேவையா என்றெல்லாம் மனதார யோசிக்காமல், எல்லோரும் குதிக்கும் அதே மலைமுகட்டிலிருந்து நீங்களும் குதிப்பதற்காகவா இத்தனை படிகளை ஏறிவந்தீர்கள்.

எனக்கொரு கதை நினைவுக்கு வருகிறது.. யாரோ ஒரு ஜோசியர், அரசனுக்கு கண்டம் என்று சொல்லிவிட்டார். உடனே அரசன், எந்தப்பீரங்கியாலும் துளைக்க முடியாதபடி நான்கு அடி தடிமனுக்குக் கட்டிக்கொண்டான் கோட்டையைச் சுற்றி அகழியை ஆழமாக்கினான்.

ஒன்றிரண்டு ஜன்னல்களைத்தவிர மற்ற திறப்புகளையெல்லாம் அடைத்துவிட்டான் மிகவும் நம்பிக்கைக்குரிய நூறு ஆயுத சிப்பாய்களை கதவருகிலே நிறுத்தினான். அந்தக்கதவைத்தாண்டி அரசன் வெளியே போகவில்லை.

ஒருமுறை தற்செயலாக அரசன் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபோது அங்கிருந்த ஒரு பிச்சைக்காரன் அரசனைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தான். அரசன் கடுங்கோபம் கொண்டு, அவனை இழுத்து வரச்சொன்னான்.

கோட்டையின் அத்தனை காவல்களையும் தாண்டிப்பிச்சைக்காரன் உள்ளே கொண்டுவரப்பட்டான். அப்போதும் அவன்சிரிப்பு அடங்கவேயில்லை. "எதற்காகச் சிரிக்கிறாய்? சொல்... இல்லாவிட்டால் உன்தலை துண்டிக்கப்படும்" என்று மிரட்டினான் அரசன்.

"ஒன்றிரண்டு ஜன்னல்களை மட்டும் ஏன் திறந்து வைத்திருக்கிறாய்... அவற்றையும் அடைத்து விடுவதுதானே? கதவையும் பூட்டிக்கொண்டுவிட்டால், எந்த ஆபத்தும் உள்ளே வரமுடியாதே?" என்று பிச்சைக்காரன் தொடர்ந்து சிரிக்கத் தொடங்கினான்.

"முட்டாளே! எல்லாவற்றையும் அடைத்துவிட்டால், நான் மூச்சுமுட்டி செத்துவிடுவேன்" என்றான் அரசன். "இப்போது மட்டும் என்ன... நீ வசிப்பது கல்லறையில்தான். என்ன ஒன்று... இந்தக்கல்லறைக்கு கதவு இருக்கிறது. காவலுக்கு ஆள் இருக்கிறது அவ்வளவு தானே வித்தியாசம்?" என்று சிரித்தான் பிச்சைக்காரன்.

உங்களுக்கும் அதைத்தான் சொல்வேன். புதிதாக எதையும் முயற்சித்துப் பார்க்கும் தைரியம் இல்லை என்றால், நமது வாழ்க்கைக்கு என்ன அர்த்தம்? எந்த ஆபத்தும் இல்லாத பத்திரமான இடம் தான் வேண்டும் என்றால், பேசாமல் கல்லறையில் போய் ஓய்வெடுத்துக்கொள்ளலாமே?

பாதுகாப்பான வாழ்க்கை என்று நம்மைச்சுற்றி சுவர்களை எழுப்பிக்கொண்டால், நம்மால் உயி்ப்போடு வாழமுடியாது. அப்படி உயி்ரைப் புதைத்துவிட்டு, உடலைமட்டும் எதற்காக அறுபது, எழுபது வருடங்களுக்கு இழுத்துக் கொண்டு அலையவேண்டும்?

கரையைவிட்டு விலகத்தைரியம் இல்லாமல் கரையோரமாகவே கப்பலைச் செலுத்தி கொண்டிருந்தால், எந்த ஊருக்



## ஆன்மீகம் 11

கும் போய்ச்சேர முடியாது. கப்பல் தரை தட்டித்தான் போகும்.

நீங்கள் எதிர்பார்த்தபடி அமையாமல் பக்கத்திற்குப் பக்கம் திகைக்கவைக்கும் திடுக்கிடும் திருப்பங்கள் வந்தால்தானே ஒரு சஸ்பென்ஸ் கதையை மிகப்பிரமாதம் என்று பாராட்டுவீர்கள்.

ஆனால் வாழ்க்கையை மட்டும் திருப்பங்கள் இல்லாமல் சலிப்புடன் அமைத்துக்கொள்ள விரும்புகிறீர்களே, ஏன்? இளைஞனாக இருப்பதற்குரிய தகுதி வலுவான உடல் மட்டும் அல்ல, திடமான மனமும் கூட!

எதிர் பாராததையும் துணிச்சலோடு எதிர்கொள்ளுங்கள் அந்தத்தெளிவை, தைரியத்தை நீங்கள் முறையான யோகப்பயிற்சியால் பெறமுடியும்.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# மட்டக்களப்புப் பிரதேசத்தில் சிறுவர் இலக்கியம்

05

## சிறுவர் பாடல், சிறுவர் கதைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறப்பு நோக்கு

'அமுதுக்கலசம்' என்னும் தொகுப்பு சிந்துநடையில் அமைந்த பாடல்களையுடையது. பெரும்பாலும் அறிவுரை கூறுவனவாகவே இப்பாடல்கள் அமைந்துள்ளன. நபிகள் நாயகத்தின் திருவாக்குகளைக் கருவாகக் கொண்டு மகளுக்குத் தந்தை கூறும் வகையிலானதும் மகனுக்குத் தந்தை கூறும் அறிவுரை வகையிலானதுமாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. இதிலுள்ள பாடல்களிலிருந்து இரு உதாரணங்கள் வருமாறு:

'இனவாதம் மொழிவாதம்
எங்களிடை நிறவாதம்
திணையளவும் கூடாதென்று
தீர்க்கமாய்ச் சொல் மகனே'

'நாவினாற் கரங்களினாற் - பிறரை
நைந்திடச் செய்திடாதோர்
பாவங்கள் விட்டொழிந்த - நல்ல
பண்புறு முஸ்லிமாவார்'

எளிமை, இனிமை, ஓசை நயம், உவமை நயம் முதலிய சிறப்புக்களை இப்பாடலிற் காணலாம்.

நாகூர் ஏ.பாவாவும் இத்துறையிற் குறிப்பிடத்தக்கவர். நமது செல்வம் (1976) என்னும் இவரது தொகுப்புக் குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்புப் பிரதேசத்திற்குரிய சில விசேட பொருட்களைப் பற்றியும் (மரமுந்திரிகை) தனது பாடல்களில் இவர் சேர்த்துள்ளார். 'முந்திரிக் கொட்டை' என்னும் பாடல் வருமாறு அமையும்.

'ஒட்டு முந்திரிக் கொட்டை
ஒற்றைக்கண் போல் நெட்டை
சுட்டுத் தட்டினால் ரெட்டை
மட்டக்களப்புக் கொட்டை'

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சிறுவர் இலக்கிய ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக்கட்டுரை"

ஆ.தங்கராசா (ஆரையம்பதி) என்பவரும் இத்துறையில் ஈடுபட்டவராவார். 'கனியமுது' பாடல் தொகுப்பில் 'பள்ளித் தோழர்களுக்கு' என்னும் தலைப்பில் இவரது கவிதை இடம் பெற்றுள்ளது.

'பள்ளி செல்லும் தோழர்களே ஒன்று
கூடுங்கள்
பாடங்களைப் படிப்பதற்குக் கூடிவா
ருங்கள்
துள்ளிச் செல்லும் பசுக்கன்றாக ஓடி
வாருங்கள்
தூய்மை காக்க ஒழுக்கம் பேச சேர்ந்து
வாருங்கள்'

செ.குணரத்தினம் கவிதை, நாவல், சிறுகதைகள் ஆகியவற்றினை எழுதியுள்ளார். இவர் அதிகளவு சிறுவர் பாடல்கள் எழுதாவிடினும் எழுதியவை குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவமுடையவை. 'பேராசை பிடித்த புள்ளு', குழந்தை, புள்ளிமான் போடாத குட்டி, பாப்பா முகத்தில் பால் நிலவு பட்டுத் தெறிக்குது, பவளத்தேர் ஆகியன அவற்றுட் சில. இவற்றுள் முதலில் குறிப்பிட்டபாடல் 'கனியமுது' தொகுதியிலும் ஏனையன 'நெஞ்சில் ஒரு மலர்' என்னும் தொகுதியிலும் வெளிவந்தவை. சுந்தரமதியின் சிறுவர் பாடல் தொகுப்பு 2009 இல் வெளிவந்தது. வாழைச்சேனை அருந்ததியின் சிறுவர் பாடல் தொகுதி 2007இல் வெளிவந்தது. மருதகவிஞர் கா.மொகமட் அஃ்ராப் பாப்பாவுக்கும் நூறு பாடல்கள் (2009) என்னும் தொகுப்பினை வெளியிட்டுள்ளார்.

நூறு சிறிய பாடல்கள் இதிலுள்ளன. ரகுமான் ஏ.ஜபார் 'வண்ண வண்ண பூக்கள்' என்னும் சிறுவர் பாடல் தொகுப்பினை வெளியிட்டுள்ளார். ச.கு.கமலசேகரனின் சிறுவர் பாடல் தொகுப்பு (2009) 24 பாடல்களை உள்ளடக்கியது. இவையனைத்தும் சிறுவர்கள் விரும்பும் பிராணிகள் மற்றும் குடும்ப உறவுகள், நற்பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கங்களாகக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

**சிறுவர் கதைகள் : (சிறுவர் கதைகள், நாவல், குறுநாவல் ஆகியன)**

மட்டக்களப்புப் பிரதேசத்தில் சிறுவர் பாடல்களைப் போல் அதிகமானோர் சிறுவர்களுக்கான கதைகளை எழுதுவதில் ஈடுபடாவிடினும் இங்கு குறிப்பிட்ட சிலர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். மாஸ்ரர் சிவலிங்கம், திமிலைத்துமிலன், மருதமைந்தன் (எம்.எஸ்.எஸ்.ஹமீது), ஓ.கே.குணநாதன் ஆகியோர் இத்துறையில் பிரதேச ரீதியிலும் ஈழத்துச் சிறுவர் கதை இலக்கிய வளர்ச்சியிலும் காத்திரமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான பங்களிப்பை நல்கி வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திமிலைத்துமிலனின் 'அணில்வால்' என்னும் கதைத் தொகுப்பு உரையும் கதையும், கதையும் பாட்டும் எனும் இரு பிரிவுகளையுடையது. அணில்வால், ஆமையும் அன்னமும், இலையில் ஒரு புழு, ஈசலும் புற்றும் என்னும் கதைகள் முதற் பிரிவிலும் உழைப்பும் உதவியும், ஊரே போற்றும் உத்தமி, எல்லையில் தீவினை, ஏழ்மையும் ஏணிதான், ஐயமில் சால்பு, ஒரு திருடன் உண்மை பேசுகிறான், ஓடும் ரயிலில் ஒரு கிழவன், ஔடதமருளிய முனிவர் ஆகிய கதைகள் இரண்டாவது பிரிவிலும் உள்ளன.

திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

(தொடரும்)

# மூளைக்காய்ச்சல் (MENINGOCOCCUS)

## குழந்தைகளுக்கு வரும் காய்ச்சல்கள்

*சென்றவாரத்தொடர்ச்சி...*

**மிக மோசமான மெனிங்கோகாக்சீமியா**

இந்த நோய் உள்ளவர்கள், சில மணி நேரங்களில் மிக மோசமான செப்டிக் ஷொக் (Septic shock) ஏற்பட்டு, தோலில் இரத்தம் கசியும். இதை பர்ப்பூராஃபல்மினன்ஸ் (purpura fulminans) என்று சொல்வார்கள்.

இதன் பின்னர் இரத்த உறைதல், இரத்த அழுத்தம் குறையும். பைகாபனேட் குறைவதால் அஸிடோஸிஸ் வரும். அட்ரீனல் சுரப்பியில் இரத்தக் கசிவு, சிறுநீரகப் பாதிப்பு, இதயம் செயலிழப்பு, நினைவிழத்தல் போன்றவை உண்டாகும். மூளைக்காய்ச்சல் வரலாம்.

**மெனிங்கோகாக்கல் மூளைக்காய்ச்சல்**

தலைவலி, கண் கூச்சம், வாந்தி, கழுத்து விறைப்பு, வலிப்பு, கை கால் விழுதல், மூளையில் நீர்கோத்தல், காய்ச்சல், இரத்த அழுத்தம் குறைதல், தோலில் இரத்தக் கசிவு, பேதி, மூக்கில் இருந்து மூளையின் நிணநீர் வடிதல், மூட்டு வீக்கம், நிமோனியா காய்ச்சல், இதயத்தில் சீழ் பிடித்தல், கண் கெடுதல், எலும்பில் சீழ்பிடித்தல், காது வலி போன்றவை முக்கிய அறிகுறிகள்.

**நீண்ட நாட்களாக இருக்கும் மெனிங்கோகாக்சீமியா**

◆ காய்ச்சல், மூட்டு வலி, தலைவலி, தோலில் சிவப்பு நிறத் தடிப்புகள் ஏற்படும்.

**பரிசோதனை**

◆ நோயை ஏற்படுத்தும் பக்றீரியா கிருமிகளை, இரத்தம், மூளை நீர் மற்றும் முட்டியில் உள்ள நீரில் இருந்து பிரித்து எடுத்துப் பரிசோதித்தல்

◆ லாடெக்ஸ் (Latex) அக்குளிடினேஷன் பரிசோதனை (Latex aggulutination text)

**இரத்தப் பரிசோதனையில்**

◆ வெள்ளை அணுக்கள் குறைவு/ அதிகரிப்பு

◆ அல்புமின் குறைவு

◆ கல்சியம் குறைவு

◆ சி-ரியாக்டிவ் புரோட்டீன் அதிகம்

◆ இரத்தம் உறையும் நேரம் அதிகமாதல் போன்றவை இருந்தால் கண்டிப்பாக மெனிங்கோகாக்கஸ் மூளைக்காய்ச்சல் ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

**சிகிச்சை**

பென்சிலின் (Pencillin-G) மருந்தை 2, 50,000-4,00,000/கிலோ/நாள் என்ற அளவில் பிரித்து 4-6 மணி நேரத்துக்கு ஒரு முறை இரத்தக்குழாய் வழியாகக் கொடுக்க வேண்டும்.

இன்றுவரை, இந்த நோய்க்கு இதுதான் சிறந்த மருந்தாகப் பயன்பட்டு வருகிறது.

◆ ஸெடோடாக்சீம் (Cetotaxime ) 200 மி.கி. / கிலோ/ நாள் அல்லது ஸெப்டிரையாக்சோன் (Ceftriaxone) 100 மி.கி./ கிலோ/நாள் ஆகிய மருந்து களை யும் பயன்படுத்த லாம்.

◆ சிகிச்சையை ஐந்து முதல் ஏழு நாட்கள் வரை தொடர் ந்து கொடுக்க வேண்டும். மேலும் சுவாசம், இதயம் போன்றவை சீராக இருப்பதற்கும் சிகிச்சை அளிக்க வேண்டும்.



**பின் விளைவுகள்**

மிகவும் மோசமான விளைவுகளாகிய இரத்தக் குழாய் பாதிப்பு, இரத்தம் உறைவது குறைதல், இரத்த அழுத்தம் குறைவது போன்றவை ஏற்படும். இவை தவிர,

◆ கை, கால்களில் இரத்தக் குழாய் பாதிக்கப்பட்டு, உடல் சதைகள் கறுத்து துண்டாகி விடும்.


◆ அட்ரீனல் சுரப்பியில் இரத்தம் வடிதல், கண் பார்வை கெடுதல், இதயம் பாதிக்கப் படுதல் , நிமோனியா காய்ச்சல், நுரையீரலில் சீழ்க்கட்டி, சிறுநீரகப் பாதிப்பு போன்றவை ஏற்படலாம்.

◆ காது கேளாமை, மூளையில் இரத்தக் குழாய் பாதிக்கப்பட்டு மூளை செயல் இழத்தல், தள்ளாட்டம், வலிப்பு, கண் பார்வை இழத்தல், தலையில் உள்ள நரம்புகள் பாதிக்கப்படுதல், பக்கவாதம் அல்லது கை கால்கள் நான்கும் செயல் இழந்து போதல், மூளையில் உள்ள நீர் ஓட்டம் தடைப்பட்டு மூளை வீங்குதல், மூட்டு வீக்கம் மற்றும் வலி போன்றவையும் ஏற்படலாம்.

**நோய்த்தடுப்பு**

◆ பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு, பென்சிலின் கொண்டு சிகிச்சை அளிப் பது.

◆ உடலில் நோய்க் கிரு மிகள் உள்ள வர்களுக்கு ரிஃபாம் பிசின் (Rifampicin) என்ற மருந்து கொடுத்து நோய்க் கிருமிகளை அழிப்பது. ரிஃபாம்பிசின் மருந்தை 10 மி.கி./கிலோ என்ற அளவில் பன்னிரண்டு மணி நேரத்துக்கு ஒருமுறை என நான்கு தடவை கொடுக்க வேண்டும்.



சிறு குழந்தையாக இருந்தால் (ஒரு மாதம்), 5 மி.கி./கிலோ என்ற அளவில் ஒரு நாள் கொடுக்க வேண்டும். 12 வயதுக் குழந்தையாக இருந்தால் செப்ட்ரையாக்ஸோன் என்ற மருந்தை 125 மி.கி. என்ற அளவில் ஒரு தடவை தசையில் கொடுக்க வேண்டும்.

**தடுப்பூசி**

◆ மோனோவாலண்ட் சீரோ குருப் - டிப்தீரியா (CRM 197) என்ற தடுப்பூசியை, குழந்தை பிறந்த இரண்டாவது மாதத்தில் ஆரம்பித்து, மாதம் ஒரு முறை என மூன்று தடவை கொடுக்க வேண்டும். ஒரு வயதிலோ அதற்குப் பின்போ ஒரு தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்.

◆ டெட்ராவாலண்ட் மெனிங்கோகாக் கல் தடுப்பூசி (Tetravalent meningococcal vaccine) இரண்டு வயதிலோ அதற்கு மேல் பட்ட வயதிலோதான் கொடுக்க வேண்டும்.

(முற்றும்)

டாக்டர் பி.சேகர்
குழந்தைநல மருத்துவர்
சென்னை




# மூக்கில் ஏற்படும் நோய்கள்!

சைனஸ் தொந்தரவு உடையவர்கள் தினமும் ஆவி பிடிக்கலாம். அதிலுள்ள வெப்பக் காற்று சளியை இளகவைத்து வெளியேற்றி விடும். அப்போது நன்றாக மூக்கை சிந்தி சளியை வெளியே எடுத்து விட வேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறை ஆவிபிடிப்பது நல்லது. மூச்சுப் பயிற்சி, யோகாசனம் செய்யலாம். நல்ல காற்றோட்டமான இடத்தில் இந்தப் பயிற் சிகளைச் செய்யலாம்.


ஒவ்வாமை எனப்படும் அலர்ஜி, தும்மல், மூக்கில் தண்ணீர் ஒழுகுதல், மூக்கில் சளி அடைப்பு போன்றவை மழைக்காலங்களில் ஏற்படுவது சகஜமே.சைனஸ் பிரச்சினை இருந்தால் மேற்கண்ட தொந்தரவுகள் அதை அதிகமாக்கி விடும். சைனஸ் என்பது மூக்கின் உட்பகுதியில் எலும்புகளுக்கு மத்தியில் உள்ள வெற்றிடமாகும்.

ஏற்கனவே ஆஸ்துமா, மூச்சுத்திணறல் இருந்தால் ஜலதோஷத்தால் வரும் சாதாரண பிரச்சினைகள் அவற்றை அதிகப்படுத்தி விடும்.

அடிக்கடி மூக்கில் தண்ணீராக ஒழுகினால் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம். மூளைக்குப் பாதுகாப்பு அளிக்கும் சி.எஸ்.எப். என்ற நீர்ப்படலம் போன்றதொரு பகுதி தலையில் அமைந்துள்ளது. அதாவது மூக்கின் மேல் பகுதிக்கு மேல் மூளையின் அடிப்பகுதி உள்ளது. இவற்றிற்கிடையேயான இடைவெளி அரித்துவிட்டாலோ, பாதிக்கப்பட்டாலோ, அந்த நீர்ப்படலம் மூக்கின் வழியே தண்ணீராக சிலருக்கு வெளியேறும். சாதாரண ஜலதோஷம் என்று அதைக் கண்டுகொள்ளாமல் விடும் போதும், காற்றில் உள்ள கிருமிகளை சுவாசிக்கும் போதும் எளிதாக மூளையைத் தாக்கலாம்.

இப்போது சுமார் 80 சதவீதம் பேருக்கு மூக்குத்தண்டு வளைந்துதான் காணப்படுகிறது. எல்லோருக்கும்.இந்த வளைவுப் பிரச்சினை தருவதில்லை. மூக்குத் தண்டின் வளைவு அதிகமாகி வலது மூக்கு அல்லது இடது மூக்கு சுவாசத்தில் சிக்கலை ஏற்படுத்தும் போது சைனஸ் பிரச்சினை ஏற்படுகிறது.

முன்பெல்லாம் இதுபோன்ற பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு இல்லை.நவீன நோய்ப் பரிசோதனை கருவிகள் வந்து விட்டதாலும், எண்டோஸ்கோபிக் சைனஸ் அறுவைச் சிகிச்சை மூலமும் இப்போது சைனஸ் க்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கிறது.




அலர்ஜி, காளான், நுண்கிருமிகள் மூலம் மூக்கில் சதை (பாலிப்) வளரும். மருந்துகளால் இந்த சதை வளர்ச்சியை சரிப்படுத்துவது கடினம். இதையும் சைனஸ் அறுவைச் சிகிச்சை மூலம் சரிசெய்யலாம். நோய் எதிர்ப்பு சக்தித்திறன் குறைந்தவர்கள், நீரிழிவுநோய் கொண்டவர்கள், புற்றுநோய், சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சை செய்து கொண்டவர்கள், அறு வைச்சிகிச்சைக்குப் பின்னும் மூக்கில் சதை வளரும் வாய்ப்புள்ளது. இவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறை சதை நீக்கும் அறுவைச்சிகிச்சை மேற்கொள்ள நேரிடும். காளான் வகை சதை வளர்ச்சியைக் கண்டு கொள்ளாமல் விட்டால் கண் நரம்பில் பாதிப்பை ஏற்படுத்தி பார்வைத் திறனைக் குறைக்கவும், சில சமயம் மூளையைப் பாதிக் கும் வாய்ப்பும் உண்டு.

**குழந்தைகளுக்குச் சைனஸ் வருமா?**

குழந்தையின் உடல் வளர்ச்சி மற்றும் உறுப்புக்களின் வளர்ச்சி குறைவாகவே இருக்கும் என்பதால் சைனஸ் தொந்தரவு வருவதற்கான வாய்ப்புக்கள் குறைவு. சிறு வயதிலேயே சைனஸ் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் மருந்து மாத்திரைகளில் சரி செய்ய முயற்சிக்கவும். அறுவைச் சிகிச்சை தான் தீர்வாக இருக்கமுடியும் என்ற நிலை எனில் 10 வயது வரை மருந்து மாத்திரைகள் கொடுத்து நோயின் வீரியத்தை அதிகப்படுத்தாமல் காலம் தள்ளியபின் அறுவைச் சிகிச்சை செய்யலாம்.

**"காது" கொடுத்துக் கேளுங்க...**

ஒருவர் ஒருநாளைக்கு இவ்வளவு ஒலியைத்தான் கேட்க வேண்டும் என்று வரையறையுள்ளது. இதைவிட அதிகமான சத்தத்தை கேட்கும்போது நரம்புச் செல்களை பாதித்து செவிட்டுத் தன்மை உருவாகிறது. ஒலியின் அளவு டெசிபல் குறியீடுகளால் அளவிடப்படுகிறது. சாதாரணமாக 60 முதல் 70 டெசிபல் சத்தத்தைக் கேட்பதால் பிரச் சினை ஏற்படுவதில்லை.அதற்கு மேல் மிகையான சத்தத்தைக் கேட்கும்போது காது நரம்புகள் பாதிப்படைகின்றன.

அதிக இரைச்சல் மிகுந்த இயந்திரத்தில் பணியாற்றும்போது, சத்தத்தைக் குறைத்துக் கொடுக்கும் உபகரணங்களைப் பயன்படுத்துவது அவசியம்.வேலையின் இடையே குறிப்பிட்ட மணி நேரத்திற்கு ஒருமுறை சற்று நேரம் இரைச்சல் இல்லாத இடங்களில் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

குழந்தை பிறந்து ஒரு வயதானவுடன் பேசத் தொடங்கி விடுகிறது.அப்படி மழலை மொழியில் குழந்தை பேசவில்லை என்றால் உடனே மருத்துவரை அணுக வேண்டும். குழந்தைக்கு பேச்சுத்திறமை கிடைக்க வில்லை என்று இரண்டு, மூன்று வயது வரை காத்திருக்கின்றனர். கிராமத்திலோ 10 வயது வரையில் டாக்டரிடம் காண்பிக்காமல் இருக்கின்றனர். ஒரு வயதிலேயே இதைக் கண்டு பிடிக்கும் போது காது கேட்கும் கருவியின் மூலம் கேட்கும் சக்தியைக் கொடுக்க முடியும்.

தீபாவளி, கோவில் விழாக்கள், பண்டிகைகள், ஊர்வலங்களில் வெடிவெடிக்கும் போது அதன் அருகில் நிற்பதும் காதுக்கு ஆபத்தைத் தரும். வெடிப்பதன் மூலம் உருவாகும் மிகை ஒலிகாதுச் சவ்வைக் கிழிக்கவும் அல்லது காது நரம்புகளைப் பாதிக்கவும் செய்யலாம்.


காதுக்குள் அழுக்குச் சேர்ந்தால் 'பட்ஸ்' மூலம் சுத்தம் செய்வதைப் பார்த்திருப்போம். ஆனால் பட்ஸ் மூலம் சுத்தம் செய்வது தவறான பழக்கம். அழுக்கை வெளியே எடுப்பதற்குப் பதிலாக 'பட்ஸ்' மூலம் காதுக்குள் தள்ளிவிடும் வாய்ப்பு அதிகம். பொதுவாக அழுக்கு தானாகவே வெளியேறும் விதத்தில் காதின் அமைப்பு அமைந்துள்ளது. அப்படியிருந்தும் காதுக்குள் அழுக்கு அதிகமாக இருப்பதாக உணர்ந்தால் டாக்டரை தொடர்பு கொண்டு சுத்தம் செய்யலாம். 6 மாதங்களுக்கு ஒருமுறை சுத்தம் செய்வது நல்லது.

(முற்றும்)

டாக்டர் ரமணிராஜ்
சென்னை

## பருவமழை காரணமாக

# கண்டாவளை, கரைச்சி பிரதேச செயலர் பிரிவுகளில் 7401 குடும்பங்கள் பாதிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 7ஆயிரத்து 401 குடும்பங்கள் தற்பொழுது பெய்து வரும் பருவமழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது பெய்து வரும் பருவகால மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 668 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 659 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஐந்து நலன்புரி நிலையங்களில் 111 குடும்பங்களைச் சேர்ந்த 383 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

2 ஆயிரத்து 709 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்து உள்ளதுடன் 11 ஆயிரத்து 623 ஹெக்டேயர் நிலப்பரப்பில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட குமரபுரம் ,பரந்தன், உமையாள்புரம், கோறக்கண்கட்டு, ஊரி யான் ,முரசுமோட்டை,கண்டாவளை,பெரிய குளம்,புளியம் பொக்கணை, தருமபுரம் கிழக்கு, தருமபுரம் மேற்கு, புன்னை நீராவி, பிரமந்தனாறு, தட்டுவன் கொட்டி ஆகிய கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மருதநகர், பன்னங்க ண்டி, சிவிக்சென்ரர் ஆகிய கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரத்து 733 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 895 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 3 நலன்புரி நிலையங்களில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 231 அங்கத்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களுக்கான சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதாக வும் மேலும் அறிய முடிகின்றது. (ஸ்ரீ-3-30)




## சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் கொட்டகைகள் அமைக்கப்படவில்லை மக்கள் விசனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் சைக்கிள், மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் கொட்டகைகள் அமைக்கப்படாதுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சைக்கிள், மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் கொட்டகை அமைக்கப்படாததால் வெயிலிலும், மழையிலும் தமது சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி வைக்க வேண்டியுள்ளதுடன், இவ்வாறு நிறுத்தி வைக்கப்படும் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களுக்கு கட்டணம் அறவிடப்படுவதாகவும் சில சமயம் தமது சைக்கிள்களை காற்றுப் போன நிலையில் உருட்டிச் செல்வதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனவே, இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பொதுமக்களின்நலன் சார்ந்து செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ-3-30)

# கிளி. மாவட்டத்தில் பெரிய குளங்களின் நீர்மட்டம் உயர்வால் வான்கதவுகள் திறப்பு

(கிளிநொச்சி)

தற்போது பெய்துவரும் பருவமழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல பெரிய குளங்களின் நீர் மட்டம் உயர்வடைந்து வான் பாய்ந்த வண்ணம் உள்ளது. இரணைமடுக் குளத்தின் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் பொறியியலாளர் அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் நேற்றைய நீர் மட்ட அளவுகளின் படி இரணைமடுக் குளத்தின் நீர்க் கொள்ளளவு 34 அடியாகவும் தற்போது 31 அடி 8 அங்குலமாகவும் உள்ளதுடன் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.



அக்கராயன் குளம் 23 அடி 5 அங்குலமாகவும் புதுமுறிப்பு குளம் 16 அடி 10 அங்குலமாகவும் கனகாம்பிகைக்குளம் 10 அடி 3 அங்குலமாகவும் கரியாலை ,நாகபடுவான் குளம் 10 அடி 4 அங்குலமாகவும் வன்னேரிக்குளம் 9 அடி 10 அங்குலமாகவும் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது.

இதேவேளை அக்கராயன் குளம் 5 அங்குலம், புதுமுறிப்புகுளம் 4 அங்குலம், கனகாம்பிகைக்குளம்3 அங்குலம், கரியாலை நாகபடுவான் 4 அங்குலம், வன்னேரிக்குளம் 4 அங்குலமும் வான்பாய்ந்த வண்ணம் உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளர் அலுவலகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஸ்ரீ-3-30)

## யுத்தத்தால் பாதிப்புற்ற

# கல்வியியற் கல்லூரி மாணவர்கள் மீண்டும் கல்வியைத் தொடர அனுமதி

(கிளிநொச்சி)

கடந்த கால போரினால் கல்வியைத் தொடர முடியாது பாதிக்கப்பட்ட கல்வியற் கல்லூரி மாணவர்கள் மீளவும் கல்வியைத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2007-2008 ஆம் ஆண்டுகளில் கல்வியற் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டு போர்ச் சூழலால் கல்வியைத் தொடர முடியாத மாணவர்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு- சந்திரகுமாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து உயர் கல்வி அமைச்சின் கல்வியற் கல்லூரி ஆணையா ளரிடம் மேற்படி மாணவர்கள் கல்வியைத் தொடர அனுமதிக்குமாறு கோரிக்கையினை விடுத்திருந்தார்.

அதற்கமைய 2011 ஆம் ஆண்டு கல்வியற் கல்லூரியில் கல்வியைத் தொடர கல்வியற் கல்லூரிகள் ஆணையாளர் அனுமதித்துள்ளார்.

இதன்படி உஷாஜினி (ஜெயந்திநகர்) அட்டாளைச் சேனை கல்வியற் கல்லூரி, செல்வி தற்பரா - தர்காநகர் கல்வியற் கல்லூரி, செல்வி எம். கந்தசாமி (உருத்திரபுரம்) வவுனியா கல்வியற் கல்லூரி, ஜே.கஜன் (பளை) மட்டக்களப்பு கல்வியூற்கல்லூரி, ஜே.தீபன் (மாதகல்) வவுனியா கல்வியற் கல்லூரி ஆகிய மாணவர்கள் மீளவும் கல்வியைத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-3-30)

# கல்லாறு கிராமத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு 100 வீடுகள் நிர்மாணம்

கிளிநொச்சி ,கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லாறு கிராமத்தில் யு.என்.ஹபிற்றெற் நிறுவனத்தால் 100 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

கல்லாறு கிராமத்தில் மீள்குடியேறிய 100 குடும்பங்களுக்கு இவ்வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இவர்களுக்கு தலா 1/4 ஏக்கர் வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் இக்காணிகளில் 100 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-3-30)

# நாச்சிக்குடா கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் கையளிப்பு

(கிளிநொச்சி)

பூநகரி நாச்சிக்குடா பிரதேசத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு யு.என்.டி.பி நிறுவனத்தின் அனுசரணையுடன் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நாச்சிக்குடா யாகப்பர் இறங்குதுறையில் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் வைத்து 25 கடற்றொழிலாளர்களுக்கு 3 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் 50 வீத மானியத்திலும் 50 வீத வட்டியில்லாக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இக் கடற்றொழில் உபகரணங்களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் இ.கணேசமூர்த்தி, பூநகரி பிரதேச செயலர். UNDP வன்னிப் பிராந்திய தலைமை அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-3-30)



கிளி/ வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தரம் 1 மாணவர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (படம்:- வட்டக்கச்சி செய்தியாளர்)

வழக்கம் என்பது முதலில் ஓட்டடை, பிறகு இரும்புச் சங்கிலி.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## எரிபொருள் நிலையங்களின் மகுட வாசகம் 'பெற்றோல் முடிந்துவிட்டது'

யுத்தம் நடந்த காலம் – ஏ9 பாதை பூட்டப்பட்டிருந்த வேளை, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 350 ரூபாய், சவர்க்காரம் நூற்று ஐம்பது ரூபாய், ஒரு லீற்றர் பெற்றோல் ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு இப்படியெல்லாம் விலை கொடுத்துச் சீவியம் நடத்தியவர்கள் நாங்கள்.

யுத்த காலத்தில் அத்தகைய துன்பங்களை அனுபவித்தமை தகும். ஆனால், இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. ஏ–9 பயணத்திற்குக் குறையில்லை. இருந்தும் சில பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாத அவலம் யாழ்.குடாநாட்டில் இருப்பது அபத்தமாகும்.

அதில் குறிப்பாகப் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருட்களின் தட்டுப்பாடு மகா துன்பம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கக்கூடிய பெரும்பாலான எரிபொருள் நிலையங்கள் தங்களின் பெறுமதியான ஆவணமாக ஒரு பதாகையை வைத்திருக்கின்றன. அதில் 'பெற்றோல் முடிந்துவிட்டது' என எழுதப்பட்டுள்ளது.

சர்வ சாதாரணமாக அந்தப் பதாகையைப் பெற்றோல் நிரப்பும் பம்பியில் தொங்கவிடுவர். இதைப் பார்த்த மாணவன் ஒருவன் தனது ஆசிரியரிடம் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மகுட வாசகம் என்ன தெரியுமா சேர்? என்று கேட்டுள்ளான்.

ஆசிரியர் அதிர்ந்து. போனார். எரிபொருள் நிலையங்களுக்கும் மகுட வாசகம் உண்டா? எனக்குத் தெரியாதே! என்ன மகுட வாசகம் என்று ஆசிரியர் வினவ,

அதற்கு 'பெற்றோல் முடிந்துவிட்டது' என்பது தான் அந்த மகுட வாசகம் என்று மாணவன் பதில் பகர்ந்தான்.

அந்தளவிற்கு எங்கள் எரிபொருள் நிலையங்களின் இருப்பு உள்ளது.

யாழ்.குடாநாட்டு மக்கள் எரிபொருள் தட்டுப்பாட்டை நீண்டகாலமாக அனுபவித்தவர்கள் என்பது உண்மைதான். அதற்காகத் தொடர்ந்தும் அந்தத் துன்பத்தை அனுபவித்தாக வேண்டுமா? என்ன?

பொதுவில் எரிபொருள் நிலையங்கள் இருபத்து நான்கு மணிநேரமும் இயங்க வேண்டும். அப்போதுதான் வாகனப் போக்குவரத்துச் சீராக இயங்கும். இருந்தும் எங்கள் மண்ணில் இருபத்து நான்கு மணிநேரமும் இயங்குதல் என்ற பேச்சுக்கு இடமில்லை. குறைந்தது இரவு பத்து மணியேனும் எரிபொருள் நிலையங்கள் இயங்கினால் அது உத்தமம்.

அதைவிட மிகவும் முக்கியம் எரிபொருள் நிலையங்கள் கையிருப்பை – தாங்கிருப்பைப் பேணுவதாகும். யாழ்.குடாநாடு வாகனப் போக்குவரத்தில் உச்சம் அடைந்திருக்கும் இந்நேரத்தில் பெற்றோல் முடிந்துவிட்டது என்ற பதாகையைத் தொங்கவிடுவது எங்களிடம் இருக்கக்கூடிய பல வீனத்தைப் பகிரங்கப்படுத்துவதாகவே அமையும்.

தனிப்பட்ட வர்த்தகர்கள் பெற்றோலை விற்பனை செய்ய முடியாத சட்டக் கட்டுப்பாடுகள் இருக்கும்போது, இலங்கையின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற எரிபொருள் விற்பனை முகவர்கள் 'முடிந்துவிட்டது' என்று அறிவித்தல் போடுகிறார்கள் எனில் எங்கோ கோளாறு இருக்கின்றது என்பதே பொருளாகும். சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

### தேசிய கல்வியியற் கல்லூரிகளில்

# தகவல் தொழில் நுட்ப பாடத்திற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் தகவல் தொழில்நுட்பப் பாடத்திற்கான அனுமதிக்காக நடாத்தப்பட்ட தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இதற்கமைய வவுனியா ,மன்னார் , முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து தேர்வுப் பரீட்சைக்குத் தோற்ற சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும்18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதம் தபால்மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பெயர் குறிப்பிட்டு அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியுடன் தொடர்புகொண்டு அழைப்புக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.பேர்ணாட் கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர் களின் பெயர் விபரம் வருமாறு ,

**கிளிநொச்சி**

ராஜரெட்ணம் மகிந்தன் (நெளுக்குளம் ,வவுனியா) ,சிறிஸ்கந்தராஜா கமல்ராஜ் (உதயநகர் மேற்கு , கிளிநொச்சி)

**வவுனியா**

சோமசுந்தரம் நிரோஜன் (குருமண்காடு) , புஷ்பநாதன் சாருஜன் (நெளுக்குளம்),சொர்ணலிங்கம் சகானா (பூவரசன்குளம்), ஆனந்தசிவம் சிந்துஜன் (தாண்டிக்குளம்), பிரகாசம் பிரியதர்ஷினி (பாரதிபுரம்), அனுரூபா இந்திரராஜா (பூந்தோட்டம்), தம்பிராசா பிரசாந் (வேப்பங்குளம்), லிகிதா கனகலிங்கம் (தோணிக்கல்), கிருஷ்ணவேணி தேவராஜா (சமகபுறம்), கந்தராசா தரண்யா (பூவரசன்குளம்), கௌசினி அரியரட்ணம் (தாண்டிக்குளம்), ஜெயராசா ஜெனார்த்தனன் (தோணிக்கல்).

**மன்னார்**

கலீல் ரகுமான் மொஹமட் பஸ்லி (புத்தளம்), நிரோஜினி திலகரட்ணம் (பனங்கட்டுக் கொட்டு கிழக்கு), சகாயனந்தன் நிக்கலஸ் செல்டன் (செபஸ்தியான் வீதி), அருள்பிரபாஜினி செபஸ்தியன் குரூஸ் (வங்காலை), பதூர் உஸ்மான் ஷபிரா (உப்புக்குளம்), பெனடிக்ட் நியோன் ஜெசிக்கா (சாவல்கட்டு), ரகுமான் அப்துல் பசீத்(புத்தளம்),ஜோசப் அபியா பிளசம்துரம் (பேசாலை), தேவசகாயம் நிவேதிக்கா டயஸ்(தாழ்வுபாடு), சூசைய்யா அன்ரன் ஜெயகாந்தன் (மனனார்).

கருநேந்திரன் றிக்சாட்சன் (தலைமன்னார்),கார்த்திகா கைலைநாதன் (உப்புக்குளம்). (ஸ்ரீ–2)

## வவுனியா -அநுராதபுரம் விசேட ரயில் சேவை

(கொழும்பு)

வவுனியாவில் இருந்து அநுராதபுரம் வரையும் விசேட புகையிரத சேவையை நடாத்த புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மதவாச்சிப் பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளம் காரணமாக பேருந்து சேவைகள் தடைப்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியாவுக்கும் அநுராதபுரத்துக்கும் இடையிலான இந்தப் புகையிரத சேவையால் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் தென்பகுதி பயணிகள் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மதவாச்சிப் பகுதியில் வெள்ள நிலைமை சீராகும் வரையும் இந்தப் புகையிரத சேவை நடைபெறுமென அதிகாரிகள் தெரிவித்தனர். (ஸ்ரீ–2)

## ரத்தோட்டை பிரதேசத்தில் நிலம் தாழிறங்கி வருகிறது

### மக்கள் மத்தியில் பரபரப்பு

மாத்தளை மாவட்டத்தின் ரத்தோட்டை பிரதேசத்தில் 25 ஏக்கர் பரப்பைக்கொண்ட நிலம் மெது மெதுவாக நிலத்திற்குள் தாழிறங்கி வருவதால் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு நிலவுகின்றது.

இப்பிரதேசத்திலுள்ள 32 வீடுகள் மற்றும் சுற்றாடலிலுள்ள உயரமான மரங்கள் போன்றவை நிலத்திற்குள் அமிழ்ந்து வருவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பூகற்பவியலாளர் மொரேமட தெரிவித்தார்.

இதன் காரணமாக புஞ்சிரத் தொட்டையில் மூன்று வீடுகள் போதிக் கொட்டுவையில் 14 வீடுகளும் பெரிதும் சேதமடைந்து காணப்படுகின்றன.

தற்போது 50 -60அடி உயரங் கொண்டதாகக் காணப்பட்ட மரங்கள் பல நிலத்தில் புதையுண்டு இப்போது சுமார் 30 அடிகள் வரையே வெளியே தெரிவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ–2)

## விசுவமடுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

கிளிநொச்சி)

விசுவமடுப் பொலிஸார் கசிப்பு மற்றும் போதைப் பொருட்கள் ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக செயற்பட்டு வருவதாக விசுவமடு பொலிஸ் நிலைய அதிகாரி அபயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் விசுவமடு குமாரசாமிபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 60 போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் அதனோடு தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

குமாரசாமிபுரம் 12ஆம் கட்டைப் பகுதியின் விற்பனைக்கென 2 போத்தல் கசிப்பினை வைத்திருந்த பெண்ணொருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை சமூக சிந்தனையற்று விசுவமடுப் பகுதியில் பலர் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாகவும் அறிய முடிகின்றது.

(ஸ்ரீ–3–30)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்




தெய்வீக வெளிப்பாடான(Revelation) வேதங்களிலிருந்து இந்துக்கள் தங்கள் மதத்தைப் பெற்றுள்ளனர். வேதங்களுக்கு ஆரம்பமும் முடிவும் இல்லை என்பது அவர்கள் கூற்று. ஒரு நூலுக்கு ஆரம்பமோ முடிவோ இல்லாதிருக்குமா, அது அபத்தம் என்று உங்களுக்குத் தோன்றும். ஆனால், வேதங்கள் என்று குறிப்பிடப்படுவது நூல்கள் அன்று. வெவ்வேறு மக்களால் வெவ்வேறு காலங்களில் திரட்டி வைக்கப்பட்ட, ஆன்மீக விதிகளின் கருவூலமே வேதங்கள். புவியீர்ப்பு விதி, அது கண்டறியப்படும் முன்னரே இருந் தது, மனித இனம் முழுவதும் அதை மறந்து விட்டாலும் அது இருக்கும். அவ்வாறே ஆன்மீக உலகின் விதிகளும் ஓர் ஆன்மாவுக்கும் இன்னோர் ஆன்மாவுக்கும், தனிப்பட்ட ஆன்மாக்களுக்கும் அனைத்து ஆன்மாக்களின் தந்தைக்கும் இடையே உள்ள தார்மீக, ஆன்மீக, நீதி நெறி உறவுகள் அவை கண்டு பிடிக்கப் படுவதற்கு முன்னரும் இருந்தன. நாம் அவற்றை மறந்தாலும் இருக்கும்.

# முபாரக் அல்லது சுலைமானை அமெரிக்கா ஆதரித்தால் அது மிகப் பெரும் பின்னடைவாகும்

## எகிப்தின் ஜனநாயகத் தலைவர் எல்பரேடி தெரிவிப்பு

எகிப்தில் தடைசெய்யப்பட்ட இயக்கமான முஸ்லிம் சகோதரத்துவ கட்சி உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சிகள் அந்நாட்டு துணை ஜனாதிபதி ஒமர் சுலைமானை நேற்று முன் தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தையை ஆரம் பித்தன. இதில் அதிருப்தி அடைந்து ள்ள மக்கள் 13 ஆவது நாளான நேற்று முன்தின மும் தொடர்ந்து தங்கள் போராட்டத்தை நடத் தினர். இன்றும் எதிர்வரும் 11ஆம் திகதியும் இலட்சக்கணக்கானோர் பங்கேற்கும் பேர ணிக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

எகிப்தில் ஜனாதிபதி ஹேஸ்னி முபாரக் பதவி விலகக் கோரி பொதுமக்கள் கடந்த 13




நாட்களாக தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி பதவி விலகினால் அன்றி பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ளமாட்டோம். தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அறிவித்த முஸ்லிம் சகோதரத்துவ கட்சி நேற்று முன்தினம் நாட்டின் அரசியல் நெருக்கடி தீர்ந்தவுடன் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதாக அறிவித்தது. இந்நிலை யில் நேற்று முன்தினம் புதிய திருப்பமாக அக் கட்சி பேச்சுவார்த்தையில் கலந்துகொண் டது. இதுகுறித்து அக்கட்சியின் இணை யத்த ளத்தில் செய்தித் தொடர்பாளர் கமால் அப்துல் நாசர் கூறுகையில், மக்களின் கோரிக்கை யை அரசு தரப்பில் எவ்வளவு கவனமாகப் பரிசீலிக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொள் வதற்காக நாங்கள் இப் பேச்சுவார்த் தையில் கலந்துகொண்டிருக்கிறோம் என்று விளக்கம் அளித்திருந்தார். இதில் ஜனநாயகத் தலைவர் எல்பரேடியும் கலந்து கொண்டுள்ளார். கடந்த சனிக்கிழமை எல்பரேடி அளித்த பேட் டியில், இடைக்கால அரசு அமைவதில் முபாரக் அல்லது சுலைமானை அமெரிக்கா ஆதரித் தால் அது மிகப் பெரும் பின்னடைவாக இருக்கும் என்று விமர்சித்திருந்தார்.

கடந்த சில நாட்களாக எகிப்தின் அறிஞர் கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் பலர் கொண்ட அறிஞர்குழு ஒன்று இந்தப் பேச்சுவார்த் தையைப் பரிசீலிக்கும்படி இரு தரப்பிடமும் கூறி வந்தது குறிப்பிடத்தக்கது.

எகிப்து நெருக்கடியைத் தீர்ப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உலகத் தலைவர்கள் பலருடன் கடந்த சனிக்கிழமை பேசியதாக வெள்ளைமாளிகை தெரிவித் துள்ளது. இது குறித்து வெளியிட்டுள்ள அறி க்கையில் ஐக்கிய அரபு நாடுகள் இளவரசர் முகமது பின் ஜாயேத், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சல மெர்க்கெல் ஆகியோருடன் ஒபாமா பேசி னார். எகிப்தில் பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மீது நடக்கும் அடக்கு முறைகள் குறித்தும் அவர் கவலை தெரி வித்தார்.முறையான, அமைதியான, வெளிப்ப டையான அதிகார மாற்றம் அங்கு நடக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் என்று குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜோ. பிடன், எகிப்து துணை ஜனாதிபதி ஒமர் சுலைமானை தொலைபேசி யில் தொடர்பு கொண்டு அரசியல் சீர்திருத் தங்களை உடனடியாக மேற்கொள்ள வற் புறுத்தினார். மேலும், ஐ.நா. பொதுச் செயலர் மூனும் எகிப்தில் ஸ்திரத்தன்மை தேவை என்று வலியுறுத்தியுள்ளார்.

**சிரியாவில் பதற்றம்**

துனிசியா, எகிப்தைத் தொடர்ந்து தற்போது அரபு நாடுகளில் அரசுகளுக்கு எதிராகப் போரட்டங்கள் வெடித்து வருகின்றன. சிரி யாவில் டுவிட்டர் மற்றும் பேஸ்புக் மூலம் கட ந்த வாரம் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



நடத்த மக்கள் அழைப்பு விடுத்தனர். ஆனால், அது தோல்வியில் முடிந்தது. தொடந்து நாட் டின் வடபகுதியில் குர்திஷ் இன மக்கள் வசிக் கும் நாட்டின் வடபகுதியில் அரசு இராணுவத் தைக் குவித்துள்ளது. இணையத்தளத்திற்கு கட்டுபாடுகள் விதித்துள்ளது.

அல்ஜீரியாவில் ஜனாதிபதி அப்துல்லா அஜீஸ்புட்டாபிளிக்கா உடனடியாகப் பதவி விலக்கக் கோரி திட்டமிட்டபடி எதிர்வரும் 12 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாக அந் நாட்டு எதிர்க்கட்சி அறிவித்துள்ளது. அங்கு கட ந்த 19 ஆண்டுகளாக இருந்து வரும் அவசர நிலை விரைவில் நீக்கப்படும் என்று சமீபத் தில் தான் ஜனாதிபதி அறிவித்தார். (ஶ்ரீ)

# மகாத்மாகாந்தியும் அகபரும் சிறந்த அரசியல் தலைவர்கள்

## டைம் பத்திரிகை பாராட்டு

(நியூயோர்க்)

உலகம் முழுவதும் உள்ள சிறந்த 25 அர சியல் தலைவர்களில் இந்தியாவின் மகாத்மா காந்தி, மொகாலய மன்னர் அக்பர் ஆகி யோரை சிறந்த அரசியல் தலைவர்கள் என பாராட்டி அமெரிக்காவின் டைம் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் புகழ் பெற்ற பத்திரிகையான டைம் உலக அளவில் சிறந்த 25 அரசியல் தலைவர்களின் பெயர் களைப் பட்டியலிட்டுள்ளது. இதில் இந்தியா வின் சுதந்திரத்திற்காக பாடுபட்ட மகாத்மா காந்தி 16 ஆம் நூற்றாண்டில் மிகச் சிறந்த மொகாலய மன்னர் ஜலாலுதீன் முகமது அக்பர் ஆகிய இருவரும் அந்தப் பத்திரிகை யால் பாராட்டப்பட்டுள்ளனர்.

தென் ஆபிரிக்காவில் வக்கீல் தொழில் செய்து வந்த மகாத்மாகாந்தியடிகள் இந்தி யாவில் இந்தியர்கள் அடிமைப்பட்டுக் கிடப்பதை பார்த்துக் கொதித்தெழுந்தார். கடந்த 1930 ஆம் ஆண்டு உப்புசத்தியாகிரகம், வெள்ளை யனே வெளியேறு இயக்கம் உள்ளிட்ட போராட் டங்களால் இந்தியாவிற்கு 1947 ஆம் ஆண்டு சுதந்திரத்தினைப் பெற்றுத்தந்தார். இவரது போரா ட்டம் அமெரிக்க மக்கள் உரிமைக்காகப் போரா டிய மார்டின் லூதர் கிங் இனவெறிக் கொள் கையை கடுமையாக எதிர்த்த நெல்சன் மண் டேலா ஆகியோரை நினைவூட்டுகிறது. இதனால் உலகம் போற்றும் அரசியல் தலைவராக உள்ளார்.

அதேபோன்று 16 ஆம் நூற்றாண்டில் வட இந்தியா முழுவதும் ஆட்சி செய்த அக்பர் சிற ந்த கவிஞர், தத்துவமேதை, கலை இலக்கியத் தில் இவர் கொண்டுள்ள ஆர்வம் ஆகியவற் றால் புகழப்படுகிறார். இவரது ஆட்சிக்காலம் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியைப் போன்று அமைந்தது என்றும் அந்தப் பத்திரி கையில் புகழப்பட்டுள்ளது. மேலும் திபெத்திய புத்தமதத் தலைவர் தலாய்லாமா, அடால்ப் ஹிட்லர், முசோலினி, மாவோதுங், அலெக் ஸாண்டர், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கள் றொனால்டு ரீகன், ஆபிரகாம் லிங்கன் உள்ளிட்டோரும் டைம்பத்திரிகையின் பாரா ட்டு பட்டியலில் உள்ளனர். (ஶ்ரீ-2)

# முஷாரப் மீது சப்பாத்து வீச்சு

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் மீது லண்டனில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் மர்மநபர் ஒருவர் சப்பாத்து வீசியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் கடந்த 2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறினார். தற்போது லண்டனில் இருக்கும் முஷாரப் கடந்த 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் எனும் கட்சியைத் தொடங்கினார். இந்நிலையில் இக்கட்சியின் பொதுக்கூட்டம் லண்டனில் உள்ள வால்தாமாஸ்டவ் மாவட்டத்தில் நடந் தது. இதில் ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட வர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்ட முஷாரப் பேச ஆரம்பித் தார். அப்போது பார்வையாளர் கூட்டத்தில் ஒரு வாலிபர் திடீரென தனது காலில் இருந்து சப்பாத்தை கழற்றி மேடை மீது வீசி எறிந் தார். ஆனால், அதிர்ஷடவசமாக சப்பாத்து முஷாரப் மீது விழவில்லை. மேடையின் முன்பகுதியில் விழுந்தது. உடனடியாக பாதுகாவலர்கள் வாலிபரை மடக்கிப்பிடித்து கைது செய்ததாக ஜியோ செய்தி சனல் வெளி யிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். எனினும் கைது செய்யப்பட் டவர் யார்? என்பது குறித்த விபரம் வெளி யிடப்படவில்லை. (ஶ்ரீ-2)

# சோனியாகாந்தி குறித்து இத்தாலியர்கள் பெருமிதம்



(ரோம்)


இந்தியப் பிரதமர் ஒருவருக்கு மனைவியாக அமைந்த சோனியா இன்று இந்திய அரசியலில் ஒரு முக்கிய இடத்தில் உள்ளார். அவர் இந்தியராகவே மாறி அந்நாட்டின் நலன்களுக் காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார் என்று இத்தாலியைச் சேர்ந்தவர்கள் கூறியுள்ளனர்.

இத்தாலி தலைநகர் ரோமில் வசித்து வரும் கார் சாரதி, கடை உரிமையாளர், லூயிஸ் பல்கலை மாணவர்கள், வடிவமைப்பா ளர், மூத்த அரசியல்வாதி போன்றோரிடம் செய்தி நிறுவனம் ஒன்று, சோனியா பற்றிய கருத் துக்களைக் கேட்டு வெளியிட்டதாவது,

அவரது திருமணத்துக்குப் பின் அவர் இந்தியராகவே மாறிவிட்டார். காதலுக்கு எவ்வித பண்பாடு, எல்லை, இனம் மற்றும் மதத் தடைகள் கிடையாது என்பதை இது காட்டுகிறது. இப்போது இந்திய அரசியலில் அவர் சக்திவாய்ந்த ஒரு தலைவராக விளங்குகிறார்.

ஒரு சிறிய நகர பெண்ணாக இருந்த இவர், சக்திவாய்ந்த ஒரு பிரதமரின் மகனிடம் காதலில் விழுந்து, திருமணத்துக்குப் பின் முற்றிலும் வேறான ஒரு பண்பாடு மற்றும் அரசியல் பின்னணி கொண்ட குடும்பத்துடன் ஒத்துப் போவது என்பதை ஒருவரால் கற்பனை கூட செய்ய முடியாததொன்றாகும். உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின், ஓர் அரசியல் கட்சியின் தலைவராக இருப்பது, ஒரு நாவல் படிப்பது போன்று உள்ளது.

அவர் சேலை கட்டும் விதமே இந்திய நாகரிகத்தை அவர் ஏற்றுக் கொண்டதைக் காட்டுகிறது. இத்தாலியப் பிரதிநிதிகள் இந்தியா செல்லும் போது அவர் ஒரு முறை கூட இத்தாலிய மொழியில் பேசியது கிடையாது. உலகின் சக்திவாய்ந்த 100 நபர்களில் ஒருவராக அவர் இருப்பதைப் பார்க்கும் போது எங்களுக்குப் பெருமையாக உள்ளது என அவர்கள் தெரிவித்தனர். (ஶ்ரீ-2)



நேபாள நாட்டின் புதிய பிரதமராக ஜலநாத் கனல் (வலது), பதவியேற்றார்.அவருக்கு ஜனாதிபதி ராம்பரன் யாதவ் (இடது) பதவிப் பிரமாணம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# ஆஸி. அணியின் ஆதிக்கம் நான்காவது தொடரில் ஆரம்பம்



நான்காவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் 8ஆம் திகதி முதல் நவம்பர் 8ஆம் திகதி வரை ஆசிய நாடுகளான இந்தியா மற்றும் பாகிஸ்தானில் நடைபெற்றன.

முதல் மூன்று உலகக் கிண்ணத் தொடர்களுடன் ஒப்பிடும் போது இந்தமுறை சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அதாவது முதல் முறையாக உலகக் கிண்ணத் தொடர் இங்கிலாந்துக்கு வெளியே நடத்தப்பட்டது. அடுத்து 60 ஓவர்கள் கொண்டு நடைபெற்று வந்த ஆட்டம் 50 ஓவர்கள் போட்டியாகக் குறைக்கப்பட்டது.

மற்றபடி 8 அணிகளே இத்தொடரிலும் பங்கேற்றன. இதில் 'ஏ' பிரிவில் இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, சிம்பாவே ஆகிய அணிகளும் 'பி' பிரிவில் பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை ஆகிய அணிகளும் இடம் பெற்றன. ஒவ்வொரு அணியும் தமது பிரிவிலுள்ள மற்ற அணிகளுடன் இருமுறை மோதின.

நடப்புச் சம்பியன் கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி லீக் சுற்றில் 6 ஆட்டங்களில் 5இல் வெற்றி பெற்று எளிதாக அரையிறுதிக்குள் நுழைந்தது.

அத்துடன் அவுஸ்திரேலிய அணியும் 5 ஆட்டங்களில் வெற்றி பெற்று அரையிறுதிச் சுற்றை எட்டியது. 'பி' பிரிவில் பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

முதல் மூன்று உலகக் கிண்ணத் தொடர்களிலும் இறுதிப் போட்டி வரை முன்னேறி இருமுறை சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள் அணி முதன் முறையாக லீக் சுற்றுடன் வெளியேற்றப்பட்டது.

அரையிறுதிச் சுற்றில் போட்டியை நடத்திய நாடுகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. முதலாவது அரையிறுதியில் அவுஸ்திரேலிய அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியிடம் சரணடைந்தது.

இந்நிலையில் அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதிய இறுதிப் போட்டி நவம்பர் 8ஆம் திகதி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இரசிகர்கள் குவிந்து இருந்தனர்.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுக்களையிழந்து 253 ஓட்டங்களைச் சேர்த்தது. இதில் டேவிட் பூன் 75 ஓட்டங்கள் எடுத்தார்.

கடைசி 6 ஓவர்களில் 65 ஓட்டங்கள் குவித்ததன் மூலம் அவுஸ்திரேலிய அணி சவாலான இலக்கை எட்டியது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 246 ஓட்டங்களை எடுக்க முடிந்தது.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது அவுஸ்திரேலியப் பந்துவீச்சாளர் கிரேக் மெக்டேர்மோட் 10 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து, பரப்பான ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார்.

இப்போட்டியில் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைச் சுவைத்த அலன் போர்டர் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி முதன் முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதுதான் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அவுஸ்திரேலிய அணியின் ஆதிக்கத்தின் ஆரம்பமாக அமைந்தது.




# பிரவீண் குமார் விலகல்

உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியிலிருந்து வேகப் பந்துவீச்சாளர் பிரவீண் குமார் விலகிக் கொண்டுள்ளார்.

இம்மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகும் உலகக் கிண்ணத் தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியில் வேகப்பந்து வீச்சாளர் பிரவீண் குமாரும் இடம்பெற்றிருந்தார்.

இந்நிலையில் தென்னாபிரிக்கச் சுற்றுப் பயணத்தின் போது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக இங்கிலாந்தில் சிகிச்சை பெற்றுவந்த அவர், உடற் தகுதி பெறாததையடுத்து உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்குப் பதிலாக ஸ்ரீசாந்த் அல்லது இஷாந்த் சர்மா இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈடன் கார்டன் ஆய்வு ஐ.சி.சி. குழு திருப்தி



(கொல்கத்தா)

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் ஐ.சி.சி. மைதானக் குழுவினர் மீண்டும் ஆய்வு நடத்தினர். பணிகள் ஓரளவுக்கு நிறைவு பெற்றதால் அவர்கள் திருப்தி அடைந்துள்ளதாகத் தெரிகிறது.

10ஆவது உலகக் கோப்பைத் தொடரில் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் மொத்தம் நான்கு போட்டிகள் நடக்கவிருந்தன. ஆனால், மைதானத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவுபெறாத காரணத்தால் எதிர்வரும் 27ஆம் திகதி இங்கு நடக்கவிருந்த இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியைச் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) பெங்களூருக்கு மாற்றியது.

இது கொல்கத்தாவில் பலத்த எதிர்ப்பை ஏற்படுத்தியது. இதனால் வெறுத்துப்போன கொல்கத்தா கிரிக்கெட் சங்கம் (சி.ஏ.பி.) மைதானக் கூரை தொடர்பான பணிகளை நான்காவது ஐ.பி.எல். தொடர் முடிந்தவுடன்தான் ஆரம்பிப்போம் எனத் தெரிவித்தது. இதனால் மீதமுள்ள மூன்று லீக் போட்டிகள் இங்கு நடக்குமா என்று சந்தேகம் ஏற்பட்டது.

இந்நிலையில் நேற்று ஐ.சி.சி. மைதானக் குழுவினர் ஈடன் கார்டன் மைதானத்தில் மீண்டும் ஆய்வு நடத்தினர். மைதானம் முழுவதையும் சுற்றிப் பார்த்த அவர்கள் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு கலரிகள், 'டிரசிங் ரூம்' உள்ளிட்ட பலவற்றையும் பார்வையிட்டனர். சைட் ஸ்கிறீன்களை நீண்ட நேரம் ஆய்வு செய்து கொண்டிருந்தனர். இந்தப் பணிகளில் திருப்தி கண்டுள்ள ஐ.சி.சி. மீதமுள்ள வேலைகளை எதிர்வரும் 14ஆம் திகதிக்குள் முடித்து பெப்ரவரி 22க்குள் மைதானம் முழுமையாகத் தயாராக வேண்டுமெனத் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இது குறித்து சி.ஏ.பி. இணைச் செயலர் பிஸ்வரப் தே கூறுகையில்,

மைதானத்தில் உள்ள அனைத்து வசதிகளையும் அவர்களுக்குக் காட்டினோம். ஒட்டுமொத்தமாக அனைத்தையும் பார்வையிட்ட அவர்கள் எங்களிடம் எதுவும் தெரிவிக்கவில்லை என்றார்.

இதையடுத்து ஐ.சி.சி. சம்மதிக்கும் பட்சத்தில் வரும் மார்ச் 15, 18, 20 திகதிகளில் இந்திய அணி பங்கேற்காத மூன்று லீக் போட்டிகள் இங்கு நடக்கும்.

**ஐ.சி.சி.க்கு எதிர்ப்பு**

ஈடன் கார்டனில் இந்திய அணி விளையாட இருந்த போட்டியை பெங்களூருக்கு மாற்றிய ஐ.சி.சி. குழுவுக்குக் கொல்கத்தாவில் நேற்று கறுப்புக் கொடி காட்டிப் பெரும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. மைதானத்தின் முன் திரண்ட இரசிகர்கள் ஐ.சி.சி.க்கு எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினர்.

## கட்சிகளின் செயலாளர்களை...

கின்றனர்.

இதனால் குறித்த பகுதிகளில் தேர்தலைப் பிற்போடுமாறு சில அரசியற் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பும் மார்ச் மாதம் 17ஆம் திகதி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலையும் நடத்தத் தேவையான நடவடிக்கைகளைத் தேர்தல்கள் ஆணையகம் மேற்கொண்டு வருகின்றது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விருப்பு எண்களை வழங்குவது தொடர்பான பட்டியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கும் சுயேட்சைக் குழுக்களுக்கான பட்டியல்கள் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## மக்களுக்கு அளித்த உறுதி...

எதிர்பார்த்திருந்தனர். எனினும் அரசாங்கம் அதனை உறுதி அளித்தபடி வழங்கவில்லை எனவும் இவ்வாறு பொருட்களின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றமைக்கு அரசாங்கத்தின் ஊழல், வீண்விரயம் என்பனவே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## MEDIA RESOURCE AND TRAINING CENTRE

(Joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden)

### Post of Trainer in Journalism (On Contract)

Applications are invited from suitable candidates for the post of Trainer in Journalism (On Contract) in the Media Resource and Training Centre, University of Jaffna upto **25th February 2011.**

**Qualifications:**

i. A Degree from a recognized University
ii. Should have completed a course in Training of Trainers in Journalism
iii. Possesses minimum of **one year experience** in print or electronic media or both

* Preference will be given those who have experience in Teaching of Journalism in recognized Institutions.

**Salary: Rs.20,750/- (All inclusive and fixed per month)**

**Selection by interview**

**General Conditions**

This is a **full-time assignment**, initially for a period of **one year** from the date of commencement of the assignment and renewable if the services rendered and work performances during the tenure of assignment are satisfactory.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute the EPF and the Employees Trust Fund (ETF).

Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/ Academic Establishments**, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of **Rs.100/-** per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23x10 *c.m.* in size.

Applications for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.**

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of the Respective Institutions. Incomplete, illegible applications received after the closing date will be rejected without intimation.

**Registrar**
**2011.02.07**

(C-2413)

# சுதந்திரதின நிகழ்வில் பிரதமர் இல்லை...

அரசுக்கும் டி.எம்.ஜயரட்ணவுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகவே நாட்டின் 63ஆவது சுதந்திரதின வைபவத்தில் பிரதமர் கலந்துகொள்ளவில்லை எனவும் கூறப்படுகின்றது.

இலங்கையில் எல்லா மதங்களும் சமமானவை. தனியொரு மதத்தை முன்னுரிமைப்படுத்த முடியாது என அண்மையில் பிரதமர் ஜயரட்ண தெரிவித்திருந்தார்.

அவரின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமய அரசின் ஆட்டம் விரைவில் முடிந்து விடும் என ஆவேசமாகக் கூறியிருந்தது.

இதையடுத்தே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான பிரதமர் டி.எம்.ஜயரட்ணவுக்கும் ஆளும் தரப்பிற்கும் இடையில் முரண்பாடு வலுக்கத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரதமராக இருந்த போது தமிழினத்திற்கு எதிராகத் தனது கருத்துக்களைத் தெரிவித்து வந்தார்.

ஆனால், டி.எம்.ஜயரட்ண பிரதமராகப் பதவியேற்றதிலிருந்து பௌத்த மதத்தை முன்னுரிமைப்படுத்துவதைத் தவிர்த்து வருவதுடன் இலங்கையில் சகல மதங்களும் மதிக்கப்படல் வேண்டுமெனவும் அனைத்து மதங்களும் சமமான மரியாதைக்குரியவை என்றும் கூறி வந்துள்ளார்.

இதேவேளை பௌத்தர்கள் ஏனைய மதத்தினருடன் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சம்புத்த ஜயந்தி நிகழ்வுகளில் ஏனைய மதத்தவர்கள் கலந்து கொள்ளக் கூடாதென சில பௌத்த பிக்குகள் வெளியிட்டுள்ள கருத்திற்கு மகாநாயக்க தேரர்கள் ஆதரவளித்தால் 2600ஆம் சம்புத்த ஜயந்தி நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவிலிருந்து தாம் விலகப் போவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற தமது கொள்கையில் மாற்றம் இல்லையெனத் தெரிவித்துள்ள அவர், சில பௌத்த பிக்குகளின் கருத்துக்களினால் தாம் கவலையடைவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# அரசியல் அங்கீகாரத்தை...

பிட்டுள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் நிதியுதவியுடன் செயற்படும் நேர்டோ மனிதாபிமானப் பணிகளில் மட்டும் ஈடுபடும் எனவும் கூறியுள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரதிநிதிகளுடன் கே.பி. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளார். நேர்டோவின் கிளிநொச்சி அலுவலகத்தில் வைத்து போரின் போது கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சிலரது மனைவிமாரை கே.பியும் அவரது குழுவினரும் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

ஒட்டிசுட்டான் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் அன்பு இல்லம் என்ற சிறுவர் இல்லத்திற்கும் இந்த தூதுக் குழுவினர் சென்றிருந்ததுடன் ஒட்டிசுட்டான் பகுதியில் அண்மையில் மீள் குடியேற்றப்பட்ட மக்களையும் இக்குழுவினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்குச்சென்ற கே.பி. தலைமையிலான குழுவினர் யாழ்.நகரில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் யாழ்ப்பாண சமூகத்தில் பலதரப்பட்டவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதுதான் தனது ஒரேஒரு நோக்கம் என கே.பி. இக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற மக்கள் தங்களால் முடிந்தவரை கல்வி அறிவினை பெற வேண்டிய தேவையினையும் அவர் இக் கூட்டத்தில் வலியுறுத்தியிருந்தார்.

பருத்தித்துறையில் அமைந்துள்ள நேர்டோவின் அலுவலகத்திற்குச் சென்ற இக் குழுவினர் அங்கு கூடியிருந்த போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடனும் கலந்துரையாடினர்.

அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் கே.பி. தற்போது வைக்கப்பட்டுள்ள போதிலும் இத்தகைய மனிதாபிமான பணிகளில் ஈடுபடுவதற்கு அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் மூத்த அதிகாரியொருவர் கூறுகிறார்.

நேர்டோ என்ற இவ்வமைப்பு அரசியல் கட்சியாக செயற்படுமா அல்லது கே.பி. அரசியலில் ஈடுபடுத்தப்படுவாரா எனக் கேட்கப்பட்ட போது, அதற்கான வாய்ப்புக்கள் எதுவும் இல்லை என இந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஐலன்ட் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் தனக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் இல்லை என கே.பி. கூறியிருந்தார்.

புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் நிதியினை பெற்று போரினால் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான பொது மக்களுக்கும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு அமைப்பாகவே நேர்டோ செயற்படும் என அரசாங்கம் தெரிவிக்கின்றது.

கே.பிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு சென்று வருவதற்கான அனுமதியினையும் அரசாங்கம் வழங்கியிருக்கிறது என இச் செய்திக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# கரவெட்டி...

சென்று கொண்டிருந்த லொறியுடன் நெல்லியடியிலிருந்து கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த குடும்பஸ்தர் விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே பலியானார்.

இதன் போது வேகக்கட்டுப் பாட்டை இழந்த லொறி கரவெட்டி பிரதேச செயலக மதிலையும் உடைத்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்ட பருத்தித்துறை நீதவான், உயிரிழந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கு மாறு நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தர விட்டார். (ந-5,3,10,24,60)

# வேட்புமனு...

எதிர்ப்புத் தெரிவித்தே இந்த மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வேட்பு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்சி பெயரில் தமிழ் மொழி பெயர்ப்பு தவறாக காணப்படுவதாகக் கூறி மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி இவ் வேட்பு மனுக்களை நிராகரித்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தேர்தல் சட்டங்களுக்கு மாறானது என கூறியுள்ள அமைச்சர் சுசில்பிரேம ஜயந்த, அதனை மீண்டும் ஏற்றுக் கொண்டு சட்ட ரீதியானது என தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தை அறிவிக்குமாறு கோரி மேன்முறையீடு செய்துள்ளோம் என்றார். (ந-5)


Web Designing - Hosting

இணையம் தொடர்பான தீர்வுகளுக்கு இன்றே அழையுங்கள்.

021 2220261 0779 471771

.com வருடத்திற்கு ரூ.1000 மட்டுமே

Web Hosting - Rs.1000/Year

webster networks MAKING DREAMS REALITY

php

#214, மானிப்பாய் வீதி, யாழ்நகர்

(வைத்தீஸ்வரா கல்லூரி அருகில்)


# மரண அறிவித்தல்

## செல்லம்மா கணபதிப்பிள்ளை



நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஓட்டுமடம், மணல்தறை லேன்-கந்தர்மடம் என்பவற்றினை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா கணபதிப்பிள்ளை 07.02.2011 திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் நீலாயதாட்சி தம்பதியினரின் இளைய மகளும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், மயில்வாகனம் (கனடா), மகாலிங்கம் (வவுனியா), லோகநாதன் (பிரதம ஒப்புநோக்குநர், வலம்புரி), காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற கணேசலிங்கம் (கணபதி கணேசன், செம்பருத்தி பப்பிளிக்கேஷன்ஸ் மலேசியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் லில்லி திரேஸ் (கனடா), தனபாக்கியலஷ்மி (வவுனியா), சிவமலர், கதிர்வேல், கௌரி (ஆசிரியை, யாழ்/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனடாவைச் சேர்ந்த பிரேமராணி-ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற நிமலராஜன் (ஊடகவியலாளர்)-பரிமளா, கமலராணி-யோகராஜா, செல்வராணி-நிரஞ்சன், நிமலராணி-ஜோண்சன் , ஜீவராஜா மற்றும் மகாலஷ்மி-ரவீந்திரராஜா (இந்தியா), கமலவாணி-திருவருன், மங்களரூபி, மணவாளதாசன்-புவனகலா (ஆசிரியை, ஸ்கந்தபுர வாணி வித்தியாலயம்), கமலதாசன்-சிவஜெயந்தினி, பிரமாதீசன் (விஷ்டாவிஷன்)-கவிதா,ஆனந்தவதனி-ஜெயராஜரூபன் (கனடா), கமலவதனி-சுதேஸ்வரன் (ஜேர்மனி),சசிதரன்-கேமலதா (லண்டன்), விஜிதரன் (விளையாட்டுப் பயிற்றுனர், கச்சேரி, வவுனியா)-சிவகௌரி (ஆசிரியை-கோவில்வயல் சி.சி.த.க.பாடசாலை), ஜெகதரன் (லண்டன்), யதுநந்தன் (கிரின்விச் பல்கலைக்கழகம் லண்டன்)-டிலானி (VICC HEALTH LANKA PVT.LTD), மதுரா-Dr.பரமேஸ்வரன் (யாழ்.போதனா வைத்தியசாலை)ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரேம்ஜி, பிரசன்னா, பிரவிந்தன், நிவேதா, நிஷாந்தி, நிலக்ஷனா, பிரியங்கா, சாரங்கா, நிமலராஜன், துவாரகா, தீப்திகா, டிலக்ஷன், நிவேதிகா, நிதர்சன், சிந்துஜா-கேதீஸ்வரன், லாவண்யா-ஜீவகரன், இந்துஜா, சிந்துஜா, சரண்யா, தனுஷிகா, அனுஷியா, மேனுஜா, தனோஜன், கஜேந்தி, விதுஜன், யதுர்ஷன், ஜனகன், யதுஷா, சுகாந், றொஷாந், கவின், மிஹிரன் ஆகியோரின் அன்புப் பீட்டியும் விதுரனின் கொள்ளுப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (08.02.2011) பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

28/36, மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(இ)

தகவல்
குடும்பத்தினர்


வெளிவந்துவிட்டது!

கல்வியியல் ஆய்வாளரும், எழுத்தாளருமான



பா.தனபாலன் அவர்களின்

உட்படுத்தல் கல்வி- Inclusive Education

❁ உட்படுத்தல் கல்வி தொடர்பான 1-வது தமிழ் நூல்

❁ நூலாசிரியரின் 30 வது கல்வியியல் நூல்

வெளியீடும், விற்பனையும், விநியோகமும், இலங்கை, இந்தியா, தமிழர் வாழும் உலகநாடுகள் அனைத்திற்கும்!

(3656)

| ஸ்ரீலங்கா புத்தகசாலை | லங்கா பதிப்பகம் |
|---|---|
| இல.234,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | FL1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, கொழும்பு -12 |
| T.P.: 0212222573 | T.P.: 0112341942 |


# கண்ணீர் அஞ்சலி



வலம்புரி நாளிதழின் பிரதம ஒப்புநோக்குநர் திரு. க.லோகநாதன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை

அவர்கள் இம்மண்ணில் நூறு ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்து ஆயிரம் பிறை கண்ட பெரும்பேறு பெற்ற அன்னை அவர்கள் 07.02.2011 அன்று அமரத்துவம் அடைந்துள்ளார். அவரின் ஆத்மா எல்லாம்வல்ல கூத்தபிரானின் திருவடிகளில் பேரின்பம் பெற இறைதாள் பணிகின்றோம்.

(இ)

வலம்புரிக் குடும்பம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.